Org.nr: 926 840 320

ISSN 2703-8440

Radio Tamil Bergen,
Krohnegården 5b,
5146 Fyllingsdalen,
Norway.

# BTA BERGEN TAMILSK AVIS — தேன்தமிழிதழ்



உறவுகளுக்கு வணக்கம்

தேன்தமிழ் இதழின் முதற் பத்திரிகையிலே கலைத்தூது நீமரியசேவியர் அடிகளாரின் புலம்பெயர் வாழ் மக்களுக்கான செய்தியுடன் அவரது புகைப்படத்தினையும் பதிவிட்டு வெளிக்கொணர்ந்தோம். ஆனால் நமது மூன்றாவது பத்திரிகையே அடிகளாரினது மறைவு செய்தியையும், நினைவுக் கட்டுரைகளையும் தாங்கி வரும் என நாம் சற்றும் எதிர்பார்க்கவில்லை.

புலம்பெயர் வாழ் மக்கள் தமிழ் மொழியினை, நமது மரபுக் கலைகளை அழிய விடாது பாதுகாத்து எமது அடுத்த சந்ததியினருக்கும் கடத்த வேண்டும். அதற்கு ஊடகத்துறை அதிமுக்கியமானது என்பதை கலைத்தூது அடிக்கடி கூறுவார். குறிப்பாக தமிழர்கள் தமிழ்த் தொலைக்காட்சி, வானொலி, பத்திரிகை போன்ற ஊடகங்களில் அதிக கவனம் எடுக்க வேண்டும் என எம்மிடம் வலியுறுத்தியுள்ளார்.

ஏப்ரல் 1ஆம் நாள் அன்று மிகப்பெரும் மனிதநேயப் பணியாளர்கள் நமது தாயகத்தில் இறந்தமை நமது தமிழ் இனத்துக்கே பேரிழப்பாகும். அடிப்படை மனித உரிமைகள் மறுக்கப்பட்ட சிறுபான்மை மக்களுக்காக வீரத்தோடு குரல் உயர்த்திய மன்னார் மறைமாவட்டத்தின் முன்னாள் ஆயர் மேதகு இராயப்பு ஜோசப் ஆண்டகை, திருமறைக் கலாமன்றத்தினை அரை நூற்றாண்டுக்கும் மேலாக இயக்கி, அதன் வழி மிக நீண்ட நெடிய கலைப் பணியாற்றி வந்த அருட்தந்தை, கலாநிதி, கலைத்தூது நீ. மரியசேவியர் அடிகளாருக்கும் தேன்தமிழ் இதழ் இதயபூர்வ அஞ்சலியைச் செலுத்தி நிற்கின்றது.

அவர்கள் விட்டுச் சென்ற பணிகள் தொடரப்பட வேண்டும். அவர்களது சிந்தனைகள், எண்ணக் கருத்துக்கள், தாகங்கள் புலம்பெயர் வாழ் மக்களையும் நோக்கியதாய் இருந்திருக்கிறது என்பதை குறிப்பிட்டேயாக வேண்டும்.

கொரோணாத் தொற்று நோய் இந்த உலகை ஆக்கிரமிக்க ஆரம்பித்து ஓராண்டு கழிந்துவிட்டது. இன்னமும் சிறிதேனும் அடங்கியதாக இல்லை. பல்லாயிரக்கணக்கானோர் நாளாந்தம் நோய்த் தொற்றுக்கு உள்ளாகின்றனர். பல்லாயிரக்கணக்கானோர் நாளாந்தம் இறந்து கொண்டிருக்கிறார்கள்.

அரசு, நகராட்சி, சுகாதார பணிப்பாளர், ஊடகத்துறையினர் என எல்லாத் தரப்பினரும் தம்மால் இயன்ற பணியினை ஆற்றி வருகின்றனர். இருப்பினும் தனிமனிதர்களாக நாமே நம்மை பாதுகாப்பதோடு, அயலாரையும் பாதுகாக்க வேண்டிய பொறுப்பில் இருக்கின்றோம்.

கடந்த மாதங்களில் வெளியாகிய தேன்தமிழ் இதழின் ஆக்கங்கள் பற்றி நமக்கு விமர்சனங்களை தந்து வரும் அனைத்து நல்ல உள்ளங்களுக்கும் நன்றி கூறி நிற்கின்றோம். தொடர்ந்தும் உங்களது ஆக்கபூர்வமான ஆக்கங்களையும், கருத்துக்களையும் எதிர்பார்த்து நிற்கின்றோம்.

தேன்தமிழ்இதழ் மின் வழியாக நோர்வேயையும் கடந்து உலகின் பல பாகங்களிலுமுள்ள வாசகர்களினை சென்றடைகிறது என்பது எமக்கு மிகவும் மகிழ்ச்சியையும், அதிக பொறுப்பினையும் ஊட்டுகிறது. இவ்விதழில் எமது இளையோர் சிலரும் பதிவுகள் கொணர்ந்தமை சிறப்பான விடயமாகும். அடுத்து வரும் இதழ்களில் இளையோரின் ஆக்கங்கள் இன்னுமதிகம் பதிவேற்றப்படும் என்பதில் ஐயமில்லை.

நன்றி, வணக்கம்!

தொடர்புகட்கு:
ttoosai@gmail.com
அல்லது,
antonipillai@hotmail.com
Tlf: (0047) 924 636 74





















# ஆயர் இராயப்பு யோசப்

## நீதிக்காய் முழங்கிய வெண்சங்கு





அருட்பணி.
போல் ஜெயந்தன் பச்சேக் (அ.ம.தி)
புனித பவுல் ஆலயம், பேர்கன், நோர்வே
Jeyanthan.Pachchek@katolsk.no

2021ம் ஏப்ரல் முதல்நாளில் விடியல் செய்தியை முந்திக்கொண்டு உலகத் தமிழர்களை, ஏன் இன்னும் அநேகரை அதிரவைத்த செய்திகள்! முதல் கோபுரம் விழுந்ததே எனச் சுதாகரிப்பதற்கு முன்பாக இரட்டை கோபுரமும் தகர்ந்தன. ‘ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை மற்றும் அருட்தந்தை மரிய சேவியர் அடிகளார் எம்மை விட்டுப்பிரிந்தார்கள்’ என்ற செய்திகள் பேரிடியாக வந்திறங்கின. இப்படி ஒரு நாள் விடிந்திருக்கவே கூடாது என மனம் அங்கலாய்த்தது.

### இராயப்பு ஜோசப் அவர்கள்

16.04.1940ம் ஆண்டு யாழ்ப்பாணம் நெடுந்தீவில் பிறந்தார். நெடுந்தீவு றோ.க. பாடசாலை, மன்னார் முருங்கன் மகா வித்தியாலயம், யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி ஆகியவற்றில் தனது பாடசாலைக் கல்வியைத் தொடர்ந்தார். கண்டி தேசிய குருமடம், திருச்சி புனித பவுல் குருமடம் ஆகியவற்றில் குருத்துவக் கல்வியைக் கற்று, 1967ஆம் ஆண்டு குருவாகத் திருநிலைப் படுத்தப்பட்டு பணித்தளங்களில் சிறப்பாகப் பணியாற்றினார். பின்னர் உரோமாபுரியில் திருச்சபைச் சட்டவியல் துறையில் முனைவர் பட்டப்படிப்பைப் பூர்த்தி செய்து தாயகம் திரும்பி பங்குக்குருவாகவும், விரிவுரையாளராகவும் பணி தொடர்ந்தார். யாழ்ப்பாணம் புனித யுவானியார் ஆலயப் பங்குக் குருவாகப் பணியாற்றிக் கொண்டிருந்தபோது 1992ம் ஆண்டு ஜுலை 6ம் நாள் மன்னார், வவுனியா ஆகிய இரு நிர்வாக மாவட்டங்களையும் உள்ளடக்கியதான மன்னார் மறைமாவட்டத்தின் ஆயராக நியமிக்கப்பட்டார்.

இது ஆயர் அவர்களின் வருட வரலாறு. ஆண்டுகள் அல்ல ஆயரின் வாழ்வை அலங்கரித்தவை. மாறாக அவரின் மனிதநேயமும், நீதியின்பால் அவர் கொண்டிருந்த தீரா வேட்கையும், பாதிக்கப்பட்டோரின்பால் அவருக்கிருந்த கரிசனையுமே அவரைத் தனித்துக் காட்டி நின்றன.

### அவரொன்றும் கடவுளுக்கு இணையானவரல்ல!



ஆன்மாவிற்கு மீட்பு, மனிதனுக்கு நிறைவாழ்வு, பசித்தோருக்கு உணவு, பிள்ளைகளுக்குக் கல்வி, வீடற்றோருக்கு உறைவிடம், உழைப்பதற்குத் தொழில், நோயுற்றோருக்கு வைத்தியம், தாக்கப்படுவோருக்குப் பாதுகாப்பு, ஒடுக்கப்படுவோருக்கு நீதி, சுபீட்ச வாழ்விற்கு அமைதி இவ்வளவுதான் இந்த ஆயர்! இதற்குமேல் வேறில்லை!

அரசியல்வாதியாய் இருந்தாலென்ன, படையணியாய் இருந்தாலென்ன, அமைப்புகளாய் இருந்தாலென்ன, பிரதிநிதிகளாய் இருந்தாலென்ன,



தூதுவர்களாய் இருந்தாலென்ன, அதிகாரிகளாய் இருந்தாலென்ன? நியாயம் என்று வந்துவிட்டால் எவருடைய நெற்றிக் கண்ணுக்கும் அஞ்சாது நெஞ்சு நிமிர்த்தும் நக்கீரன்! நியாயம் என்று வந்துவிட்டால் இம்மியளவும் சமரசம் செய்யாத நடுநிலையாளன்! ‘மக்களுக்குப் பிறகுதான் மற்றவை’ என்று பிடிவாதம் செய்யும் சாமானியன்! ‘அவரொன்றும் கடவுளுக்கு இணையானவர் அல்ல’ என்ற கூற்றை அவரால் வாழ்வு பெற்றோர் பலர் வன்மையாகக் கண்டிக்கக்கூடும். ஒன்றுமட்டும் உறுதி அவர் கடவுளோடு தம்மை இணைத்துக்கொண்ட இறையூழியன், கடவுள் அனுப்பிய நல்லாயன்!



### சொல்வதற்கு என்னதான் இருக்கிறது!

ஆயரைப்பற்றி புதிதாக எதை இங்கு எழுதிவிடமுடியும்? கடந்த நாட்களில் ஆயிரக்கணக்கான பதிவுகளாய், இலட்சக்கணக்கான பகிர்வுகளாய் தமிழ் இலத்திரனியல், ஒலி, ஒளி, அச்சு ஊடகங்களையும் அநேகரின் மனங்களையும் ஆக்கிரமித்திருந்தவர் இந்த ஆயரே. அவரைப்பற்றி சொல்வதற்குப் புதிதாக என்னதான் இருக்கிறது? என கடந்துபோய்விட முடியாத ஆளுமை, இந்த ஆயர். ஆண்டகையைப்பற்றி கொஞ்சமாவது குறித்துக்காட்டாமல் விட்டுவிட்டால் ஏதோ ஒன்று ஆறாத ரணமாய் நம் ஆத்மாவை அரித்துக்கொண்டேயிருக்கும் என்பது மட்டும் தெரிகிறது!

### கிட்டப் பார்வைக்கு

உயரிய தோற்றம், நிமிர்ந்த நடை, கூரிய பார்வை. இவைகளைக் கடந்து அவரது மூளையின் திசுக்களில் எப்பொழுதும் ஒரு தவிப்பு. சக மனிதனின் வலி இவரின் வலிபோல, மறுக்கப்பட்ட நீதி தம்மை உறுத்தும் முள்போல, சிதைக்கப்படும் மனித நேயம் தமக்கே வந்துவிட்ட ரணம்போல. கோபமா? கவலையா? அங்கலாய்ப்பா? ஆதங்கமா? அவசரமா என அறுதியிட்டுக் கூறமுடியாத முகவிம்பத் தோற்றம். இப்படித்தான் அவரை அநேகர் கண்டிருக்கக்கூடும்.

நெருங்கிவந்தால் இந்த நியாயஸ்தனின் நிஜ உருவம் தெளிவாய்த் தெரியும். எந்தளவிற்கென்றால் 'இது சரி, இது பிழை, இதை மாற்றவேண்டும், இதை நிறுத்தவேண்டும், இது தேவையானது, இது அவசரமற்றது' என யாரிடம் பேசுகின்றாரோ அவர்களே இந்த ஆயரின் நியாயப் பக்கத்தை நன்றாகக் கண்டுகொள்வர்.

அரசியலுக்காகவும் வாசிகளுக்காகவும் காய்களை நகர்த்தியே வாழ்க்கையைக் கரைத்துவிடுகின்ற அல்லது வெறும் காகிதத்திலும் உரைகளிலும் 'சாணக்கியம்' காட்டுகின்ற பொறுப்பிலுள்ள அநேகரைப்போலல்லாமல் இயல்பாக வாழ்ந்த ஒரு ஜீவவரலாறு!

## நேரத்தையே வளைத்தவர்



பொதுவாக ஒரு மறைமாவட்ட ஆயரின் நாளாந்தப் பணிவேலைகள் ஒருபோதும் இருபத்துநான்கு மணி நேரத்தைப் போதுமென்று சொன்னதில்லை. அவர்களின் அலுவலக மேசை நித்தமும் நிறைந்துபோயே இருக்கும். ஆயர்களின் உதவியாளரும் ஓட்டுநரும் ஓயாமல் கடிகாரத்தோடு போராடிக் கொண்டேயிருப்பர்.

இப்படியிருக்கின்ற நிலவரத்தில், இந்த இராயப்பு ஜோசப் என்கின்ற மனிதனுக்கு மாத்திரம் எப்படி ஏராளமானவை சாத்தியமாயின!
எப்படியென்றால்: அவரிடம் தெளிவு இருந்தது, மனது இருந்தது, பலம் இருந்தது, துணிவு இருந்தது. இல்லாத நேரத்தையும் அவர் கண்டுபிடித்தார்! பூட்டிய அறைகளுக்குள் அவரின் தனிப்பட்ட செபமும் தியானமும் அவரின் சக்தி மையம். ஆன்மீகத்தை மொழிபெயர்க்கத் தெரிந்திருந்த மனிதாபிமானியவர்!

## எல்லைகளைக் கடந்தவர்



மேற்கே தலைமன்னார், கிழக்கே ஆசிகுளம், வடக்கே தேவன்பிட்டி, தெற்கே வில்பத்துவரை வியாபித்திருந்த தம் மறைமாவட்டப் பகுதிகளெங்கும் மதப்பணி, சக குருக்களின், துறவிகளின் பணிகளையும் சேவைகளையும் ஒருங்கிணைத்து உத்வேகப்படுத்துவது, மேலாண்மைசெய்து நிர்வகிப்பது என ஆயர் முடிந்தளவு செய்துவிட்டாலே அடுத்த கேள்விக்கு இடமிருக்காது. அவர் மறைசார்ந்தோர் அப்பொழுதும், 'நிறைவாகப் பணிசெய்த நல்ல ஆயர்' என்றே அவருக்குப் பாராட்டுப் பத்திரம் வாசித்திருப்பர். ஆனால் 1992ல் நியமிக்கப்பட்ட இந்த ஆயர் தம் ஆலய, மத எல்லைகளைக் கடந்தார். ஈழத்தில் அழிக்கப்படும் தமிழருக்கு நியாயம் கேட்டு அடக்குமுறையாளர்களின் கதவுகளையே தட்டினார், சர்வதேசத்தின் மனச்சாட்சியை உசுப்பினார். எண்திக்குத் தமிழரையும் குவிமையப்படுத்தினார்.

## மனித மனச் சமநிலை

செட்டிகுளத்தில் வளர்ந்ததாலே என்னவோ ஆயரவர்கள் எப்பொழுதும் பயிர் வளர்ப்பதில் தனிப் பிரியம் கொண்டிருந்தார். பயிர்பச்சைகளில் 'பேராசைக்காரன்' எனச் சொன்னோருமுண்டு. கட்டட நிர்மாணங்கள் ஆயரைக் கவர்ந்த இன்னுமொரு கைப்பணி. தன் பணிக் களைப்பைத் தீர்க்க இவ்வாறானவற்றில் புலன்செலுத்தி புத்துணர்ச்சி பெற்றுக்கொள்ளுதல் அவரின் அப்பியாச யுக்திகளிலொன்று. அவ்வப்போது இலக்கியச் செய்யுள்களையும் வழிபாட்டுப் பாக்களையும் குரலெடுத்துப்பாட சந்தர்ப்பம் கண்டுபிடிப்பார். குறைவாக இருந்தாலும் தருணங்களில் அவரின் தரம் வாய்ந்த நகைச்சுவைகள் நன்றாக இரசிக்கப்படுபவை.

## மடியில் கனமில்லை, பிடியில் தளர்வில்லை!

ஆராய்ச்சிமணி அடிக்க யாராவது வந்துவிட்டால் அவர் பார்வையிட்டுக் கொண்டிருக்கும் கோப்புகளுக்கு விடுப்பு. தேவைகள் என எவரேனும் வந்துவிட்டால் தேவையானவற்றை கொடுத்து அனுப்பிவிடச்சொல்லிவிட முடியும் அவருக்கு. ஆனாலும் இருக்கின்ற வேலைகளை ஓராமாய் ஒதுக்கிவிட்டு ஒரு சில வார்த்தைகளையாவது பேசிவிட இருக்கைவிட்டு எழுந்து வருவார். எவருக்கும் அரசியல் இராணுவ நெருக்குவாரமென்றால் கிடப்பதை கிடக்கின்றபடி போட்டுவிட்டு களத்திற்கு விரைவார். கூட இருப்போரையும் கடுகதியில் இயங்கக் கேட்பார். ஓட்டத்திலேயே திட்டங்களைத் தீட்டுவார், நகர்ந்து கொண்டிருக்கும்போதே நகல்களைத் தயாரிப்பார், பயணத்திலேயும் அறிக்கைகளை ஆயத்தம் செய்வார். யார்யாரையெல்லாம் உதவிக்கு இழுக்க முடியுமோ அவர்களையெல்லாம் தன்னோடு அணிசேர்ப்பார்.



ஆபத்து எனத் தெரிந்தாலும் துணிவோடு களத்தில் நிற்பார், அருகிலிருப்போரின் எச்சரிக்கையை உதாசீனம் செய்யவேண்டும் என நினைக்காதவர். இருந்தாலும் அவரிடத்தில் கனன்றுகொண்டிருந்த ஏதோ ஒன்று அவரின் இயக்கச் சக்தியாய் இருந்துவந்தது. உணர்ச்சிவசப்பட்டு சொற்களை உதிர்க்காதவர், வீண் விமரிசனங்களில் நீர்த்துப் போகாதவர். வெற்றிக்களிப்பில் வார்த்தைகளை வீணடிக்காதவர், தோல்விகளில் விரக்திக் கண்ணிகளில் சிக்காதவர். தன்னிலை நியாயம் காட்ட பணியின் வேகத்தைக் குறைக்காதவர். இன்று விதைத்து நாளையே பழம் பறிக்க அவசரம்கொள்ளாதவர். விசேடமாய் தனித்தேவிடப்பட்டாலும் ஒற்றை வீரனாய் களமாட ஓர்மம் கொண்டவர்.



## ஆயர் ஓய்ந்துவிடமாட்டார்! அவர் கனவு மெய்ப்படும்!!

'காலத்தால் கிடைக்கின்ற பெரும் ஆளுமைகளின் காலத்திலேயே நாம் அடையக்கூடியவற்றை அடைந்துவிடவேண்டும்' என சொல்லக்கேட்கின்றபோது ஒருவேளை கனவு பூரணப்படாததுபோலத் தோன்றலாம்.

ஆனால் ஓர் இனத்தின் வரலாற்றோடு பார்க்கின்றபோது திறக்கப்படாத பக்கங்கள் இன்னும் பல காத்திருக்கின்றன. ஆயர் இராயப்பு ஜோசப் அவர்களின் வாழ்வு அர்த்தம் நிறைந்தது, அவரது போராட்டம் நியாயம் கொண்டது. அது ஒரு தனிமனிதனின் குரல் அல்ல. அது எகிப்திலிருந்து எழுந்த மோசேயின் குரல், நாசி முகாமிலிருந்து எழுந்த கோல்பேயின் குரல், பாரதத்திலிருந்து எழுந்த காந்தியின் குரல், சல்வடோரில் ஒலித்த றொமெய்ரோவின் குரல், தென் ஆபிரிக்காவில் முழங்கிய மண்டேலாவின் குரல். மாசில்லா ஆபேலின் இரத்தம் விண்ணகம்வரை ஒலிப்பதாக பைபிள் கூறுமே. அந்த விண்ணகத்தின் முற்றங்களை இன்று அலங்கரிக்கும் எம் ஆயர் இராயப்பு ஜோசப் அவர்களும் நீதிக்காய்த் தொடர்ந்தும் வழக்காடுவார். நீதியின்பால் பசி, தாகம் கொண்டோர் பேறுபெற்றோர்!



# கலைஞான வானத்தின் நிலையான கலைத்தூது

## எக்காளத்தொனி எப்போது இனி?

வானதூதர் முழங்கிய எக்காளச் சத்தம் கேட்டு
பனி போர்த்திய இருண்ட வானைக் கிழித்து
தோன்றிய நட்சத்திரத்தின் கீழே
ஒரு பகல் மனுமகனைப் பூமிக்குச் சுமந்து தந்ததென
சொல்லக் கேட்டோம்- அந்த எக்காளச் சத்தங்கள் கேட்டிலோம்.

காணுமிடமெல்லாம் கலைகள் விளையாடிய
எமது வானத்தையும் பூமியையும் கருமிருட்டுக் கவிந்த காலத்தில்
கலைத்தூதாக எக்காளம் ஏந்தி ககனமெல்லாம் முரசறைய
எங்கள்முன் வந்த சூரியன்தானே நீ?

கண்டோம், ஆயிரமாயிரம் கண்களால் கண்டோம்.
கேட்டோம்,ஆயிரமாயிரம் செவிகளால் கேட்டோம்.

ஒன்றா, இரண்டா, ஒரு பத்தா, பல நூறா...,
எதையென்று எடுத்துச் சொல்வோம்,
எந்தப் பெட்டகத்தில் அடுக்கி வைத்துப் பவுத்திரம் செய்வோம்?

சிறகெடுத்துப் பறந்து பறந்து
பறவைகளையும் தேனீக்களையும் முந்திக்கொண்டு
பட்டி தொட்டியெல்லாம் சென்று சேகரித்த
அத்தனை கலை முத்துக்களையும்
மாலையாக்கி, மரபுக்குச் சூட்டி
உலகுக்கு அழகு காட்டிய கலைச் சிற்பியல்லவா நீ?

பறிபோன கலைகளையெல்லாம் பல்லக்கில் சுமந்து வந்து
ஆரத்தழுவி உச்சி முகர்ந்து எங்கள்
காதிற் சொன்ன கதைகளெல்லாம்
காலம் முழுக்க வானம் நிரப்பி
வாசம் கமழும் வரலாறாக தேசம் பலதும் உள்ளதே ஐயா.

எதை மறப்போம், எதை விடுப்போம்....
அப்படி என்ன அவசரம் தந்தையே....

வா, மீண்டும் வா! கலைப்பரிதிகள் பூட்டிய தேரிலேறி வா.
நீ கற்பித்தவைகளை நாங்கள் களரியாடுவதைக் காணவேனும்
இன்னுமொருக்கால் வா தந்தையே.

-திருமறைக் கலாமன்றம் - நோர்வே.

## கலைத்தூது கலாநிதி நீ.மரியசேவியர் அடிகளாருடன் எனது பயணம்



-சிறிதர் செல்வி- Bergen, Norway

இயல் இசை நாடகம் என்ற முத்தமிழை தன் முழு மூச்சாய் திருமறையோடு இணைந்து, தன் கலைத்திறனாலும், நாவன்மையாலும் அனைவரையும் அன்போடும், பாசத்தோடும், கண்டிப்போடும் பேதமின்றி அணைத்து, இனம், மதம், மொழி கடந்து சமூக இணைப்பைத் தூண்டி, கலைவழி இறை பணி ஆற்றி சேவை புரிந்த, இலட்சிய புருஷர் தான் எமது தந்தை கலைத்தூது கலாநிதி நீ.மரிய சேவியர் அடிகளார். திருமறைக் கலாமன்றத்தின் ஆணிவேராக இருந்து, பல கிளை பரப்பி, விருட்சமான தந்தையின் நிழலில் இசைக்காக ஒதுங்கியவர்களில் நானும் ஒருத்தி. 12 வயதில் எனது சகோதரன் N.M.பாலச்சந்திரனின் உதவியோடு திருமறைக் கலாமன்றத்தில் இணைந்தேன். 13 வயதில் எமது இயக்குனர் தந்தையின் உருவாக்கத்தில் உருவாகிய பாடலை இலங்கை வானொலியில் புதிய உலகம் நிகழ்ச்சியில் பாடி, அவரின் பாராட்டைப் பெற்று, அவரின் பாடல்களை ரூபவாகினி தொலைக்காட்சி, ஒளி நாடாக்கள், இசைத்தட்டுகள் மற்றும் மேடைகளிலும் பாடியதை எண்ணி பெருமை அடைகின்றேன்.

திருமறைக் கலாமன்றம் என்ற பல்கலைக்கழகத்தின் பல்துறை வித்தகராக, நல்ல தாயாக, தந்தையாக, நல்ல உறவினராக, நாம் வீழ்ந்த போது கரம் கொடுத்து, தோள் கொடுத்து, தன் நிலை மறந்து, தூக்கம் மறந்து, சுகம் மறந்து, வெற்றி என்ற உயர்வுக்கு எம்மை உயர்த்தி விட்டு, இருந்த இடத்தில் இருந்தே மகிழும் நல்ல ஆசான் தந்தை அவர்கள். இசைப்பயணத்தில் நாம் பிழையற மிளிர எங்களோடு உடனிருந்து ஊக்கம் தந்து, எமது உயர்வை தம் உயர்வாக எண்ணி, எம்மை அண்ணார்ந்து பார்த்து மகிழும், எம்மைப் பெற்றெடுக்காத வளர்ப்புத்தந்தை. அவருடைய காலத்தில் அவருடைய இயக்கத்தில், படைப்புக்களில் நானும் வாழ்ந்தேன் என்பதையிட்டு பெருமையடைகிறேன். இன்று தந்தை எம்மோடு இல்லை என்பதை மனம் ஏற்க மறுக்கிறது.

தந்தையுடனான என்னால் மறக்க முடியாத உணர்வலையாக அவர் என்னை ஒரு நடிகையாக்கி மேடையேற்றியமையை குறிப்பிடலாம். 1993ம் ஆண்டு கொழும்பு டவர் மண்டபத்தில் "ஞானசவுந்தரி" இசை நாடக மேடையேற்றம். லேனாள் என்ற பாத்திரம் ஏற்றவர், தவிர்க்க முடியாத காரணத்தினால் பங்குபற்ற முடியாமையினால் குறுகிய நேரத்தில் அப்பாத்திரத்திற்கு நடிகையாக தந்தையால் நான் பணிக்கப்பட்டேன். அவரது கட்டளையை ஏற்று அந்நாடகத்தில் சிறிது தயக்கத்துடன் நடித்தேன். அந்நாட்களில் அப்பாத்திரம் பலராலும் பேசப்பட்டது. பத்திரிகைகளில் விமர்சனங்கள் வெளிவந்தன. இவற்றையெல்லாம் விட அருட்தந்தையின் பாராட்டும் பரிசும் கிடைத்தமை எனது கலை வாழ்வில் பெரும் மகிழ்வைத் தந்தது. பொதுவாக மன்றத்தில் கலையில் ஈடுபடுபவர்கள் அனைவரும் இயக்குனர் அடிகளாரின் சிறு பாராட்டு கிடைக்காதா என்று ஏங்குவதுண்டு. ஒருவரை சிறந்த கலைஞனாக ஆக்குவதில் பன்முக ஆளுமை கொண்ட தந்தைக்கு நிகர் அவர் மட்டுமே.

ஈழத்தில் குறிப்பாக சிறு சிறு கிராமங்களில் எல்லாம் ஓடி ஓடி எவரிடமெல்லாம் கலை ஆளுமை, கலை ஆர்வம் இருக்கிறது என்று தேடிக் கண்டுபிடித்து, அவர்களை தனது கட்டுப்பாட்டின் கீழ் வைத்து கலை வளர்த்தார். என்னை நெறிப்படுத்திய ஆசானே நீங்கள் மறைந்துவிடவில்லை உங்களின் ஒவ்வொரு கலை ஆற்றுகையின் ஊடாகவும் எம்மோடு வாழ்ந்து கொண்டே இருப்பீர்கள் என்பதில் ஐயமில்லை. இறைவன் திருவடியில் இன்பமுடன் இளைப்பாறுங்கள் அன்புத் தந்தையே.□

# கலைத்தூது அருட்.பணி. நீ. மரிய சேவியர் அடிகளாரும் என் தந்தை கலாபூஷணம் G.P. பேர்மினஸும்.....



-ஜீன் மேரி கிறகரி- Oslo, Norway



அன்பிற்கும் பெரு மதிப்பிற்குமுரிய அருட். பணி. நீ. மரிய சேவியர் அடிகளார் கலை வளர்க்க, மன்றம் அமைக்கத் தேர்ந்தெடுத்த மிக மூத்த உறுப்பினர்களில் என் தந்தை G.P.பேர்மினஸும் ஒருவர் என்ற உரிமை-யோடும் பெருமையோடும் அடிகளாருக்கும் என் தந்தைக்குமிடையிலிருந்த உறவை, இனிய சில நினைவுகளை இங்கு நான் வரியிட விளைகிறேன்.

அருட் பணி. நீ. மரிய சேவியர் அடிகளார்...
காலம் தந்த தவப்புதல்வன்
கருவில் தேர்ந்தெடுக்கப்பட்ட நல்ல ஆயன்
கறை படா உள்ளத்தினன்
தன்னலமற்ற நெஞ்சத்தினன்
கலைத்தாய் ஈன்ற கலைமகன்
G.P. பேர்மினஸ் கண்ட காவிய நாயகன்
தன் தலையில் தூக்கி வைத்துக் கொண்டாடிய குரு முதல்வன்

1953 களில் புனித பத்திரிசியார் கல்லூரியில் மாணவப்பருவத்திலிருந்தே கலையில் ஆர்வம் காட்டிய என் தந்தை G.P. பேர்மினஸ், 1963 களில் 'அன்ரோனியோ' எனும் இத்தாலியத் திரைப்படத்தை தமிழில் ஒலிச்சேர்க்கை செய்யும் செயற்பாட்டின் மூலம் அடிகளாரிடத்தில் அறிமுகமானவர். என் தந்தையின் கலை ஆர்வத்தையும், அவரிடமிருந்த ஆளுமையையும் இனங்கண்ட அடிகளார் 'அன்ரோனியோ' எனும் நாடகத்தில் கதாநாயகனாக நடிக்கும் வாய்ப்பினை அவருக்கு அளிக்கிறார். அங்கிருந்து ஆரம்பித்தது அவர்கள் இருவரினதும் கலையுறவு. ஏற்கனவே கலையார்வம் கொண்டிருந்த என் தந்தைக்கு அடிகளாருடனான சந்திப்பு கலையுலகில் காலூன்ற வழி சமைக்கிறது. தந்தையின் கலையார்வம், இறைப்பற்று, குருபக்தி, அர்ப்பணம், கடமை, கண்ணியம், கட்டுப்பாடு போன்ற பண்புகளைக் கண்ட அடிகளார் தன் உள்ளத்தில் அவர்க்கோர் தனி இடம் கொடுக்கிறார்.

அடிகளாருக்கிருந்த கலையார்வப் பணியில் தந்தையும் ஆர்வம் கொள்கிறார். அடிகளாரின் முதற் சீடர்களில் ஒருவராகிறார். காலஞ் செல்லச் செல்ல அடிகளாரின் தத்துப்பிள்ளையாகினார் என்றே கூறவேண்டும். கலை வளர்ச்சிக்கு அடிகளாரின் எண்ணங்களுக்குத் தோள் கொடுக்கிறார். அடிகளாரது நற்பண்புகளாலும், வளர்ப்பு முறையாலும், அவரது கனவுகளாலும் மேலும் மேலும் ஈர்க்கப்பட்ட என் தந்தை அடிகளாரைத் தன் முன்னோடியாகக் கொள்ள ஆரம்பிக்கிறார். 'நூல்கள் மூலம் கற்க முடியாத பலவற்றை நான் எங்கட பாதரிடமிருந்து கற்றுள்ளேன்'. என்று என் தந்தை கூறிப் பெருமைப்பட்ட கணங்கள் இன்னும் என் நினைவில் இழையோடுகின்றன. அதுமட்டுமன்றி மூச்சுக்கு முந்நூறு தடவை 'எங்கட பாதர், எங்கட பாதர்' என்று உரிமையுடன் உச்சரிப்பது அடிகளார் மேல் அவர் வைத்திருந்த ஆழமான பிரியத்தையும் பெருமதிப்பையும் காட்டியது.

ஆண்டுகள் ஓடின. 1967ம் ஆண்டு என் தந்தைக்கு மண ஆயத்தம் ஏற்பாடாகியிருந்தது. திருமணத்திருப்பலியை எங்கட பாதர் தான் வைக்கவேண்டும் என்று என் தந்தை விடாப்பிடியாக நின்றிருந்தாராம். திருமணத்திருப்பலியை நிறைவேற்றும் நாள் வந்தது. மகிழுந்தில் ஏற்பட்ட இயந்திரக்கோளாறு மரிய சேவியர் அடிகளாரின் வருகையில் தாமதத்தை ஏற்படுத்தியது. ஆலயத்தில் அனைவரும் குருவுக்காகக் காத்திருந்தனர். புனித யாகப்பர் ஆலயப் பங்குக் குருவோ, 'நேரமாகிறது, நான் திருப்பலியை நிறைவேற்றுகிறேன்' என முன்வருகிறார். என் தந்தை பேர்மினஸோ 'எங்கட பாதர் கட்டாயமா வருவேர், இன்னும் கொஞ்சம் பொறுப்போம்....' என்று கேட்டுக் கொள்கிறார். மறுபக்கமோ பொறுமையிழந்த உறவினர் 'எங்க உன்ர கூத்துச் சவிரி' என்று புறுபுறுக்கத் தொடங்கினராம். தானோ நம்பிக்கையுடன் காத்திருந்து மரிய சேவியர் அடிகளார் வந்த பின்னரே தன் இல்லற வாழ்வில் இணைந்தாராம் என்று நடந்த அந்த நிகழ்வினைப் பெருமையுடன் மிக சுவாரஸ்யமாக என் தந்தை கூறக்கேட்டுள்ளேன்.



அடிகளாருடன் என் தந்தைக்கிருந்த பரஸ்பர உறவானது அவர் திருமணத்தின் பின் எம் குடும்ப உறவாக அகலித்தது. நல்ல நாள் பெரு நாட்களில் குடும்ப சகிதம் ஆசீர்பெற அடிகளாரிடம் எம்மை அழைத்துச் செல்வதும், நல்ல விடயங்களுக்குச் செல்லும் போது அவருக்கு அறிவித்தல் கொடுப்பதும், குடும்பம் சார்ந்து இக்கட்டான சூழல்கள் ஏற்படும் போது அவரிடம் ஆலோசனைகளும் வழிகாட்டுதல்களும் பெறுவதும், அடிகளார் அவர்கள் நடுச்சாமம் வீடு வந்து தூக்கத்தில் எழுப்பி 'பேர்மின்ஸ் நாடகம் நடிக்கிறீரா' என்று சம்மதம் கேட்டுச் செல்வதுமாக ஒரே அமர்க்களம் தான். இருவரும் மிக்க உரிமையுடன் பழகினார்கள். அவை நிற்க, அடிகளாரும் கூடவே எம் குடும்பத்தின் சந்தோசத்திலும் துக்கத்திலும் கலந்திருந்தார். அது எமக்குக் கிடைத்த பெரும் பாக்கியம் என்றே கூறவேண்டும். கலைவாழ்விற்கு அப்பாற்பட்டு ஒரு மத குருவாக, ஓர் வழிகாட்டியாக, நல்லோர் ஆச-ானாக அடிகளார் என் தந்தையாலும் எம் குடும்பத்தாலும் பெரிதும் நேசிக்கப்பட்டார் என்பதற்கு இவை ஓரிரு எடுத்துக்காட்டுக்களே.

நிற்க,

என் தந்தை செல்லுமிடமெல்லாம் அடிகளாரின், திருமறைக்கலா மன்றத்தின் பறைசாற்றியாகச் செயற்பட்டார் என்றே கூறவேண்டும். ஏனெனில் 2004 இல் அவர் நோர்வே நாடு வந்திருந்த வேளை நண்பர் வீட்டிற்குச் சென்றால் என்ன, உறவினர் வீட்டிற்குச் சென்றால் என்ன பாதர் சவிரி... 'திருமறைக்கலாமன்றம்' என்றே புலம்பத் தொடங்குவார். மீண்டும் அவர் 2017களில் நோர்வே வந்திருந்த வேளை சுகயீனம் காரணமாக தமிழ் வைத்தியர் ஒருவரை நாட நேரிட்டது. ஏதோ ஒரு விதத்தில் வைத்தியருடனும் 'பாதர் சவிரியைத் தெரியுமா...? திருமறைக் கலாமன்றம் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா?' என்றே பறைகொட்டத் தொடங்கினார். அதிலிருந்து அடிகளாரும் அவர் கனவுகளும் எவ்வளவு என் தந்தையின் சிந்தையில் ஆக்கிரமித்திருந்தது என்பது மேலும் புலப்பட்டது.

நாடக உலகில் தனக்கு அடையாளம் கொடுத்து தான் கலையில் காலூன்றி பல வெற்றிகளை ஈட்டக் களம் அமைத்த அடிகளாருக்கு, என் தந்தை என்றும் நன்றியுடையவராக இருந்தார். அந்தச் செஞ்சோற்றுக்கடன் தீர்க்கவோ என்னவோ தன் இறுதி மூச்சு வரை அருட் தந்தையுடனான கலைப்பணிகளில் ஓர் தூணாக நின்றுழைத்தார்.


மேலும் 2018 களின் இறுதியில் ஏற்பட்ட என் தந்தையின் பிரிவு அடிகளாரைத் துக்கத்தில் ஆழ்த்தியது. நான் இறுதிச்சடங்கினை நிறைவேற்றிவிட்டு மீண்டும் புலம்பெயர்தேசம் புறப்பட ஆயத்தமான வேளை, ஆசீர் பெற்று விடை கூறுவதற்காக எங்கட பாதரிடம் சென்றிருந்தேன். அப்பொழுது பாதர் 'பிள்ள உன்ர அப்பா ஒரு புனிதன், ஒழுக்கசீலன். பேர்மினஸப் போல ஒருத்தன் இனிக் கிடைக்கமாட்டான்' என்று பெருமையுடனும் துக்கத்துடனும் கூறி மௌனத்தில் ஆழ்ந்தார். அடிகளாரின் கூற்றுக் கேட்டு உள்ளம் பூரித்தது. விழிகளில் நீர் மல்கியது. அந்த சீடத்துவத்தின் மகத்துவம் தானோ என்னவோ அடிகளாருக்கு ஆசனம் அமைத்து, செங்கம்பளம் விரித்து, மலர் தூவி, தூதர் சேனைகளுடன் அவரை வரவேற்க என் தந்தை முன் விரைந்தார் போலும், என்றே இப்போது எண்ணத் தோன்றுகிறது. 'கடவுளால் நேசிக்கப்படுபவர் விரைந்தவர் பாதம் சேர்குவர்' என்ற நம்பிக்கைக்கமைய அடிகளாரும் விரைந்து சென்று விட்டார்.

அடிகளாரின் எண்ணமும் இலக்கும் அவர் கலைஞர் வழி தேசமெங்கும் மணம் வீசட்டும்.



# ஃபாதர், ஒரு தனித்த ஆளுமை

மனோ சின்னத்துரை - பிரான்ஸ்
எழுத்தாளர், பத்திரிகையாளர், அரங்காற்றுக் கலைஞர்



அருட்தந்தை ஒருவருடன் மிக நெருக்கமாக பழகும் வாய்ப்பு அருட்திரு. நீ. மரியசேவியர் அடிகளாராலேயே எனக்குக் கிட்டியது.
அவர் இறுகத் தோள் அணைத்து உச்சியில் ஒரு முட்டு முட்டும்போது எமக்குள் ஒரு புதிய சக்தி ஊடுருவுவதாய் உணர்வோம். அவரது அந்த அணைப்பிற்காகவே காத்துக் கிடந்தோம்.

அருட்தந்தை மரியசேவியர் அடிகளாரது நாடக, கலை இலக்கிய ஈடுபாடுகள் என்னைப் பிரமிக்க வைத்தன. அவருக்குள் ஒரு கலைஞன் விஸ்வரூபமெடுத்து கொந்தளித்துக்கொண்டே இருந்தான்.
அந்தக் கொந்தளிப்பு பல காத்திரமான படைப்புகளைத் தந்தது. பல காத்திரமான கலைஞர்களை உருவாக்கியது. உலகெமெல்லாம் உற்சாகமாய் அவர் பறந்து திரிந்தார். எட்டுத்திக்கும் சென்று பாரதியின் கனவை நனவாக்கினார்.

புலம்பெயர் நாடுகளில் மன்றத்தின் கிளைகளை மட்டும் ஸ்தாபிக்கவில்லை. மனிதர்களை நேர்படுத்தினார். கலைஞர்களை உருவாக்கினார். மேலைநாட்டுக் கலைகளை தமிழுக்கு அறிமுகம் செய்வதில் தன்னாலானளவு பாடுபட்டார்.
மன்றக் கலைஞர்களோடு ஈழத்திலிருந்து உலகமெல்லாம் அவர் வலம் வந்தார் உலகத்து வளங்களை தனது கலைஞர்களுக்கு அறிமுகம் செய்வதில் ஆர்வம்காட்டினார். அவற்றையெல்லாம் ஒருங்கு திரட்டி தமிழுக்கு வளம்சேர்க்க பெருவிருப்புக் கொண்டிருந்தார்.

'கலைவழி இறைபணி' என்னும் தாரக மந்திரத்தை அவர் உச்சரித்தாலும், அவர் இறைவழி கலைப்பணி ஆற்றியதாகவே கொள்ளமுடிகிறது. மதங்களைக் கடந்து மனிதத்தை நேசித்தவர் அவர்.

1993ம் ஆண்டு. பிரான்ஸில் தமிழ் தொலைக்காட்சிகள் இணையங்கள் ஏதுமற்றிருந்த காலம். கலைஞர்கள் தம் கலைப்பசி தீர்க்க ஏங்கித்திரிந்த காலம். 'பாரிஸ்-அன்வேர்ஸ்' அரங்கில் அவரது பலிக்களம் நாடகம் மேடையேறியது. மறைந்த கலைஞர் M.T.டேமியன் சூரி அவர்கள் இயக்கினார். மூத்த கலைஞர் பெஞ்சமின் இமானுவல் சிலுவையில் அறையப்பட்டு சிலுவை மெதுமெதுவாக உயர்ந்தது.
பார்வையாளர் அரங்கிலிருந்த என் உடல் சிலிர்த்தது. சிலுவை நிமிர்ந்தபோது அடிகளாரும் அந்த உயரத்திற்கு உயர்ந்தே நின்றார். ஒரு மேடையில், அந்தகாட்சி அமைப்பின் நுட்பம் என்னைப் பிரமிக்கவைத்தது. இந்தச் சிலிர்ப்பை "ஒசை"யில் பதிவாக்கினேன். அன்றிலிருந்து ஃபாதர் இறக்கும்வரை அவருடனான இறுக்கமான தொடர்பை பேணமுயன்றேன். அவரது ஒரு சுட்டுவிரலசைவு எம்மைப்போல் பலரை இயக்கியது.

அவர், திட்டமிட்டு பாரிஸ் வந்து அரங்கேற்றிய நாடகங்கள் எனக்குப் பயிற்சிகளாகின. நாடகங்கள் என்னை ஈர்த்தன. நாடகங்கள் என் சுவாசமாகின.
ஒருசில நாடகங்களே அவருடன் இணைந்து பணியாற்றக் கிடைத்தாலும், எனது தொடர் நாடகச் செயற்பாடுகளுக்கு அவர் உந்துவிசையானார். ஏகலைவனின் ஆற்றல் என்னிடமில்லைத்தான். ஆனாலும் எனது துரோணாச்சாரியார் அவரே. எனது நாடகங்களின் ஒவ்வொரு அசைவிலும் அவரே என் மனக்கண்முன் விரிகிறார். புதிய உத்திகளை அவரே கற்றுத்தருவதாய் உணர்கிறேன். அவரே எனக்கு மேடை அமைத்தும் தருகிறார். எவ்வளவு பக்குவமாக எங்களை உள்வாங்கினார். எவ்வளவு நுட்பமாக எங்களை உற்சாகப்படுத்தினார். தனது படைப்புகள் மீதும், மன்றத்தின்மீதும் வரும் விமர்சனங்களுக்கு மிக உன்னிப்பாக காதுகொடுத்தார். மகிழ்ச்சியோடு வரவேற்றார். சிறியவர் பெரியவர் என்ற பேதமின்றி விமர்சனமே வளர்ச்சியின் படிக்கல்லென எல்லோருக்கும் கற்றுத்தந்தார். ஆற்றுகை முடிந்தபின் பங்குபற்றிய கலைஞர்கள் மத்தியில் ஃபாதர் இரண்டு கூட்டங்களை நடாத்தப் பணித்தார். ஒன்று, நாடகம் முடிந்த மறுநாள் கலைஞர்களை உற்சாகப்படுத்தும் கூட்டம். அது, கலைஞர்கள் தமக்குள்ளே மாறி மாறி புகழ்வதாய் அமையும். இந்த உற்சாகமூட்டல் கலைஞர்களுக்கு மிக மிக அவசியமென்பார். இரண்டாவது, இரண்டு நாள் அல்லது ஒரு வாரம் கழித்து நடக்கும். அந்தக்கூட்டம் ஆற்றுகையின் தவறுகளை ஈவிரக்கமின்றி காரசாரமாய் விமர்சிப்பதாக அமையும். இதுவே கலைஞர்களின் வளர்ச்சிக்குத் தேவையானது என்பார். பாரிசிலும் எங்கள் ஆற்றுகைகளின் பின், நாங்கள் ஒரு கூட்டமாவது நடாத்தத் தவறுவதில்லை.

படைப்பூக்கத்திறன் மிக்கவர்களை இனங்கண்டு தேடித்தேடி உரையாடினார். அவர்களோடு நேரங்களைச் செலவு செய்வதில் அவரிடம் ஒரு உற்சாகமிருந்தது. அவர்களிடம் உருவாகும் புதிய சிந்தனைகளை மேலும் வளர்த்தெடுக்க முனைப்புக் காட்டினார். அடுத்த தலைமுறை பற்றிய அவரது கரிசனை மிக முக்கியமானது. அதுவே மன்றத்தின் வளர்ச்சியும் வெற்றியும்கூட. தனிமனிதரான ஃபாதரின் ஆளுமை மிகப்பெரியது. சாதனைகளை வரலாறு பதிவாக்கியே நகர்கிறது.

கடைசிக் காலங்களில், அவர் தீராத நோய்களுக்கு ஆளாகியிருந்தார். ஆனாலும், சலிப்பின்றி தன்பணி தொடர்ந்தார். கடைசி வருடங்களில் எங்களைச் சந்திக்கும்போது மெல்லிய புன்னகையோடு, "இனி உங்களை நான் சந்திக்கமுடியுமோ தெரியாது" என்பார். நாங்களும் அதை புன்னகையாலேயே கடந்தோம். அவருடைய சிந்தனை முழுவதும் மன்றமும் அதன் எதிர்காலமும் தான்.
தன்னாலானமட்டும் திட்டமிட்டார். ஃபாதருடைய சிறப்பு, நேர்த்தியான திட்டமிடல், கண்டிப்பு, கட்டுப்பாடு, கூடவே அன்பு செய்தல். ஃபாதரிடம் நெருங்கும் ஒருவர், அவரைத் தந்தையாகவே உணர்ந்து கொள்வதில் எதுவித ஆச்சரியமுமல்ல.
ஃபாதர் நீங்கள் நிறையே செய்து விட்டீர்கள்! இதற்கு மேலும் நாங்கள் உங்களிடம் எதிர்பார்த்தால் நாங்கள் பேராசைக்காரர்.
உங்களின் உயர்ந்த நோக்கும், உன்னத உழைப்பும்
மன்றத்தை தொடர்ந்தும் வழிநடத்தியபடியே இருக்கும்.
சென்றுவாருங்கள் தந்தையே!

## ஒரு கலைஞனின் 122ஆம் பிறந்தநாள்.

ஒருநூற்றாண்டையும் தாண்டிய தலைமுறைகளால் அறியப்பட்ட, அறியப் பட்டுக்கொண்டேயிருக்கும் திரைப்படக் கலைஞர் சார்ளி சப்ளின்.

44வருடங்களுக்குமுன் இறந்துபோனாலும்கூட இப்போ இந்தத் திரைப்படக் கலைஞனின் 122ஆவது பிறந்ததினத்தை உலகத்துத் திரைப்பட இரசிகர்கள் கொண்டாடுகிறார்கள் என்றால், இந்தக் கலைஞன் மக்களுக்காகப் ஆற்றிச்சென்ற கலைப்பணியின் பொருட்டே.
1889ஆம் ஆண்டு சித்திரை 16ஆம் திகதி இலண்டனில் பிறந்த சார்ளி சப்ளின் தனது ஐந்தாவது வயதிலேயே நடிப்பை ஆரம்பித்து விட்டார்.
அது 1894ஆம் ஆண்டு சப்ளினின் தாயார் நடிக்கவேண்டிய ஒரு பாத்திரத்தில், அவருக்குப் பதிலாக அரங்கேறினார்.


அன்று பாலகனாக மேடையில் தொடங்கிய கலைப்பயணம் 1914இல் திரைக்கலைக்குள் நுழையும் திறனை ஏற்படுத்திக் கொடுத்தது.
1917ஆம் ஆண்டு பத்து லட்சம் அமெரிக்க டொலர்களை ஊதியமாகப் பெற்ற உச்சபட்ச நட்சத்திரமாக உயர்ந்தார் என்றால், அது மக்களின் மனங்களையும், உணர்வுகளையும் ஆட்கொண்ட கலைஞனாகத் தன்னை உருவாக்கிக் கொண்டதால் மட்டுமே சாத்தியமாயிற்று.

1914இல் இருந்து 1952 காலம் வரையும் 69குறும்படங்களையும், 17 முழுநீளப் படங்கள் நடித்து முடித்தார்.
1977ஆம் ஆண்டு நத்தார் தினத்தன்று சுவிட்சர்லாந்தில் தனது 88வது வயதில் மாபெரும் உலகக் கலைஞன் இறந்துதான் போனான்.

ஓவியம்: T. சௌந்தர் (டென்மார்க்)



***Minneord***
## *Biskop Rajappu Joseph*



Stig Utnem - Prest og organisasjonsleder



1940 - 2021

Skjærtorsdag i påskeuken døde Biskop Rajappu Joseph 81 år gammel på et sykehus i Jaffna, Sri Lanka. Den over 5 timer lange begravelsen ble strømmet direkte og hundretusener av tamiler over hele verden har trolig fulgt seremonien. En Moses-skikkelse for det tamilske folk og nasjon er gått ut av tiden og vil bli dypt savnet .Etter hans gjerning står to trekk tydelig fram. En helhjertet, klok og modige talsmann-tjeneste for hele den tamilske minoriteten . Og en uoppslutelig vilje til å ta imot alle som oppsøkte bispegården i sin nød og å være ute blant det lidende folket med trøst og oppmuntring og hjelp.

Han var en de de meget få som hadde direkte adgang til LTTEs politiske og militære ledelse og han brukte den , Hans kritikk av LTTEs bruk av barnesoldater satt ham i farlige situasjoner. Men det gjorde sannelig også hans kritikk av regjeringshærens bombing av sivile, sykehus og kirker.
I et av de siste intervjuer han gjorde før han ble rammet av et hjerneslag i 2015 sa han:
"Jeg har prioritert å omfavne og snakke om de drømmer og kamper som menneskene i mitt bispedømme - ja i hele Sri Lanka - ha. I tråd med Jesu sin oppgave med å bringe godt nytt til fattige, snakker jeg om de forsvunne, de torturerte og drepte i fangenskap , de som har mistet sine hjem og sin åkerlapp. Hvis noen kaller dette "biskopen driver politikk", så får det bare være sånn. For meg er dette en pastioral, religiøs og menneskelig oppgave".

Jeg har hatt glede av å møte Biskop Rajappu ved flere anledninger gjennom årene. Første gang var i 2001 på Mellomkirkelig råds kontor i Oslo. Da kom han ( Tamil) sammen med den nåværemde kardinal Malcolm (Singaleser) for å oppmuntre kirken og buddhistene i Norge til å engasjere seg sammen i støtte til den begynnende fredsprosess. En av deres ideer var å lage en konferanse utenfor Sri Lanka hvor ledende buddhistmunker kom sammen og drøfte Therevada-buddhismens syn på en rettferd fred. En slik konferanse ble realisert med Det norske buddhistsamfunn i førersetet.


Jeg møtte ham igjen i bispegården i Mannar bare noen uker etter den overaskende valgseier til Maitripala Sirisena i januar 2015. Jeg hadde fulgt hans iherdige engasjement for å hevde tamilers verdighet og rettigheter. Han hadde vært som en Moses som hadde gjort ærend både til landets president og til LTTEs lederne inne i jungelen i Vanni . Nå forteller han meg at han i mai 2009 , helt på tampen av borgerkrigen, ba prestene ta statuen av jomfru Maria som sto i tamilenes hellige pilegrimssted Madhi - den har stått der i flere hundreår - og lot den følge flykningene ut av krigssonen og over i et tryggere område. En genial symbolhandling.

Nå - i februar 2015- er håpet om rettferd og fred tent også i bispegården. Men han innsisterer på at de mange tusen forsvunne må gjøres rede for og at etterlatte må få anledning til å sørge og minnes de som er borte. På ett punkt i samtalen blir biskopen særdeles engasjert. Det er når han beskriver de to "elver" som renner gjennom Sri Lankas historie; den singalesiske og den tamilske. Begge folkegrupper har historiske hjemland, er nasjoner, har eget språk og kultur og særpreget økonomisk struktur. Først når denne helheten anerkjennes, kan vi snakke om den moderne srilankesiske staten og nasjonen. Denne realitet krever at det skrives en ny grunnlov der det eksplisitt sies at Sri Lanka er et multi-etnisk, multi-lingvistisk, multi-religiøst og multi-kulturelt samfunn, sier han.

Som åndelig hyrde for tamilene , også for mange i den norske diasporaen , var han svært opptatt av den ødeleggende tamilske splittelse. Derfor sto han fram som sammenkaller av Tamil Civil Society Forum , et løst nettverk av sivilsamfunnsaktivister fra nord og øst for å gi styrke til målet om anerkjennelse av tamilene som en nasjon med iboende rettigheter, men også for å gi samarbeidserfaringer.

I 2015 fikk biskop Rajappu et hjerneslag som lenket ham til en sykeseng i bispegården helt fram til sin død. På et av mine sykebesøk dit, medbrakte jeg en hilsen fra en stor gruppe tamiler i Oslo, skrevet på tamilsk med en nydelig håndskrift . Deres takknemlighet rørte ham og jeg kunne se en liten tåre bak det gjenkjennelige og forsiktige smilet .
Hvil i fred, Biskop Rajappu Joseph.

## Bishop Rayappu Joseph
**16 April 1940 to 1 April 2021**
**A respected voice of courage and morality in Sri Lanka**



The Tamil information Centre (TIC) joins the people in grieving the loss of Bishop Rayappu Joseph, who died at the age of 80 on 1 April 2021.
Bishop Joseph served as the Bishop of Mannar from 1992 to 2016, a period and place that experienced the brutality of the armed conflict in Sri Lanka and the devastation of the Indian Ocean tsunami of 2004. He was a frontline figure in the diocese, leading relief work, protesting against armed attacks and bombings of civilians, and comforting the displaced and dispossessed people. He was courageous and forthright in condemning all forms of human rights abuses by all sides in the Sri Lankan conflict. He was a moral compass when the Sri Lankan state failed in the responsibility to govern all the communities with equality, fairness and justice, and when other leaders were notably silent.

Bishop Joseph was born in Delft Island (Neduntheevu) in Jaffna District. He was educated at St Patrick's College in Jaffna and St Joseph's College in Anuradhapura. He began his seminary education at St Martins Seminary in Jaffna, and continued at the National Seminary in Ampitiya, Kandy, St Paul's Seminary in South India, Pontifical Urbaniana University in Rome and Gregorian University in Rome. He was ordained Priest on 13 December 1967. Bishop Joseph completed his doctorate in Cannon Law awarded by the Pontifical Urbaniana University in 1984. He was appointed Professor at the St Francis Xavier Seminary in Colombothurai, Jaffna. After serving in different dioceses, he was appointed the Bishop of Mannar on the 6 July 1992.

Bishop Joseph served as the Vice Chairman of the National Commission for Justice, Peace and Human Development of the Catholic Bishops' Conference for seven years. He continued to work in association with the Vatican State and other members of the Caritas Internationalis Confederation, including agencies in Norway and agencies in countries of the European Union, for the promotion of peace in Sri Lanka. Upon the request of Sri Lankan President Chandrika Kumaratunga, Bishop Joseph worked as the facilitator for peace initiatives between the Liberation Tigers of Tamil Eelam (LTTE) and the Sri Lankan government along with Archbishop Malcolm Ranjith. He worked with like-minded Buddhist clergy to create awareness in the Tamil and Sinhalese communities about the importance of peace and harmony for the future of Sri Lanka. He championed human rights through awareness programmes, campaigns and documentation of human right violations and worked to achieve free and fair elections.

The Tamil Information Centre (TIC) regularly contacted Bishop Joseph for advice on human rights and peace issues. Following the armed conflict, Bishop Joseph repeatedly emphasised the importance of national reconciliation built upon trust and truthfulness. He was deeply concerned about accountability issues which adversely affected peace and reconciliation. The Bishop was troubled by the 13th Amendment to the Sri Lankan Constitution which failed to include provisions that would bring permanent peace and described the Amendment as "fundamentally flawed".
For a question from a journalist of *Lakbima News* (5 August 2020), he said ***"I am standing for truth and Justice. We are taking about human lives and there is no 'adjustment' in human lives"***. Bishop Joseph went on to say that his dream was **'to see a true statesman who would rise above party politics, who will work for the welfare of the people irrespective who they are, who would risk life to serve people and who would stand by the people'**. He emphasized that 'till then this country will be in darkness'.

Nelson Mandela said, "Real leaders must be ready to sacrifice all for the freedom of their people". Bishop Joseph was undoubtedly a 'real leader' for the Sri Lankan community, and the Sri Lankan people have lost a true humanitarian. Speaking about Sri Lanka he said, "It is one country many nations. It is similar to India which has many nations in one country". Bishop Joseph called for the recognition of the Tamil people as a nation (meaning a people with their own heritage) which was crucial to bringing about peace in Sri Lanka.

Bishop Rayappu Joseph will be remembered and recognised for his contribution to social justice and human rights in Sri Lanka and his stand on the legitimacy of political rights of the Tamil people of Sri Lanka.

**Committed to Human Rights and Community Development**
**Tamil Information Centre (TIC)**
தமிழ் தகவல் நடுவம்
**Date: 02 April 2021**
*Photo credit: Colombotelegraph.com*



# மரியசேவியர் என்ற அறிவுக்கலைச்சுடர் அணைந்தது...

-யோ.யோண்சன் ராஜ்குமார்-


ஈழத்தின் கலை இலக்கியப் புலத்திலும், அர்ப்பணிப்புள்ள சமூகப் பணிகளிலும், கலை இலக்கியப் பாரம்பரியத்திலும் தனது பணிகளினாலும் கலை ஆளுமையினாலும் முதன்மைப் படுத்தப்பட்ட அருட்கலாநிதி நீ. மரியசேவியர் அடிகள். தனது எண்பத்தியோராவது வயதில் இவ்வுலகை நீத்தார். ஏறத்தாழ கடந்த ஆறு தசாப்தகாலமாக கலை இலக்கியத்துறைகளோடும் சமுகப்பணிகளோடும் தன்னைக் கரைத்துக் கொண்டவர், இனம் மதம் மொழிகடந்து 'மனிதம்' என்ற உயரிய சிந்தைனையை வாழ்வாக்கிக் கொண்டவர், திருமறைக் கலாமன்றம் என்ற கலாசார நிறுவனத்தினை உருவாக்கி அதனுடாக இறுதிவரையும், நாடுதழுவியும் நாடுகடந்தும் பணியாற்றிக் கொண்டிருந்தவர். அம்மன்றத்தினூடக உருவாக்கம் பெற்ற பல படைப்பாளிகள் இன்று உலகம் முழுவதும் இயங்கிக் கொண்டிருக்கிறார்கள். ஈழத்திலே யுத்தம் கொழுந்துவிட்டெரிந்த காலத்தில் தனித்து நின்று கலைசெய்து, கலையினூடாக தமிழ் இனத்தின் துயரங்களை உலகறிய செய்ததுடன் துயருற்ற மக்களுக்கான கலைவழி ஆற்றுப்படுத்தலையும் செய்தவர். இத்தகைய சிறப்புக்குரிய கலைக்குருவாகிய மரிசேவியர்அடிகள் கடந்த 01.04.2021 அன்று இறைவனடி சேர்ந்தார். 06.04.2021அன்று அவரது இறுதிச்சடங்குகள் நடைபெற்றது. இத்தகயை சூழலில் அவர் பற்றிய இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகின்றது.

## தொடக்கமும் தூண்டுதலும்

மரியசேவியர் அடிகள், 03.12.1939 அன்று இளவாலையில் பிறந்தார். கலைப் பூமியாகிய இளவாலையில் பாலப்பருவத்தில் இருந்தே கூத்துக்களில் நடித்தது மட்டுமன்றி கோவில் பாடகர் குழாமில் பாடல்களைப் பாடுதல், பாடசாலையில் நாடகங்கள் நடித்தல் என தனது கலை ஆர்வத்தினை வளர்த்துக்கொண்டவர். சிறிய குருமடத்தில் இருந்தபோது அங்கு பியானோ இசைக்கவும், பாடகர் குழுவுக்குத் தலைமை தாங்கவும் கலையோடு வளர்ந்தார். அம்பிற்றியா பெரிய குருமடத்தில் அமரர்களான அருட்திரு மைக்கேல் றொட்றிக்கோ, அருட்திரு இராயப்பு போன்ற அருட் தந்தையர்களாலும் ஊக்கமளிக்கப்பட்டார். தொடர்ந்து உரோமாபுரியில் இறையியல் பல்கலைக்கழகத்தில் கற்கின்ற காலத்தில் பலமொழி பேசுவோரோடும் பலநாட்டுக் கலாசார உறவுகளுடன் கற்று 22 வயதில் குறைந்த வயதில் பாப்பரசரின் விசேட அனுமதியுடன் குருப்பட்டம் பெற்று விசேட அனுபவங்களோடு இங்கு குருவாக வந்து பணியேற்றார். கலையைத் தனது பணிகளுக்கான ஆயுதமாகப் பயன்படுத்தத் தொடங்கினார். முன்நாள் ஆயர்களான எமிலியானுஸ்பிள்ளை, தியோகுப்பிள்ளை ஆண்டகைகளின் ஆதரவும், தட்டிக் கொடுத்தல்களும் அவரது பணிகளை விரிவடையச்செய்தன. இலங்கை வானொலியின் கத்தோலிக்க சேவைக்கு பொறுப்பாக பணியாற்றியவர் பல வானொலி நாடகங்களை எழுதினார்.

## திருமறைக் கலாமன்றத்தின் தாபகர்.

1963ஆம் ஆண்டில் இருந்தே கலைச் செயற்பாடுகளை ஆற்றத் தொடங்கிய மரியசேவியர் அடிகள் திருமறைக்கலாமன்றம் என்னும் அமைப்பினை 1965ஆம் ஆண்டு ஆரம்பித்து மரணிக்கும் வரைக்கும் அதன் இயக்குநராக இருந்து பணியாற்றிக் கொண்டிருந்தவர். ஆரம்பத்தில் தனியே திருப்பாடுகளின் காட்சிகளையும் நாடகங்களையும் மட்டும் நிகழ்த்தும் நிறுவனமாக உருவாக்கி 1988ஆம் ஆண்டில் இருந்து இனமத மொழி கடந்தியங்கும் கலாசார மையமாக (Centre For PerForming Arts) பல்வேறுபட்ட பணிகளைகளையும் ஆற்றிவரும் நிறுவனமாக இதனை வளர்த்தெடுத்தார். மரபுவழிக் கலைகளான கூத்து, இசைநாடகம், கிராமியக்கலைகள் என்பவற்றினைப் பேணும்



நடபடிக்கைகள், மரபுவழி, நவீன நாடகங்கள் எனப் பல்வகை நாடகங்களையும் மேடையேற்றுதல், இளையோரை நுண்கலைகளில் பயிற்றுவிப்பதற்கான கலைத்தூது அழகியல் கல்லூரி, நாடகப்பயிலகம், சிறுவர் கலைக்கூடம், ஓவியக்கலைவட்டம் எனப் பல்வேறு பிரிவுகளை உருவாக்கி எதிர்காலத்தின் கலை ஆளுமைகளை உருவாக்கும் பணிகளை ஆற்றிவந்தார். மன்றத்தில் உருவாகிய பல இளைஞர்கள் இன்று உலகம் முழுவதும் பல்வேறு இடங்களிலும் சாதனைபுரிந்துவருவது குறிப்பிடத்தக்கது. இலங்கையில் வேறு எந்த நிறுவனமும் அரங்கேற்றாத அளவுக்கு 300க்கும் மேற்பட்ட நாடகங்களை திருமறைக்கலாமன்றம் அரங்கேற்றியுள்ளது. அதுமட்டுமன்றி தமிழ்விழா, இலக்கிய விழா, நாட்டுக்கூத்துவிழா, இசைநாடகவிழா, கிராமியக் கலைவிழா, இசைவிழா, நாடகவிழா.. எனப் பல்வேறு விழாக்களை காலத்துக்குகாலம் நிகழ்த்தி எமது பண்பாட்டின் பெறுமானங்கள் யுத்தகாலத்திலும் அழிந்து போகாதவகையில் அவற்றிக்கு எழுச்சியை ஏற்படுத்தியுள்ளார்.

அதுமட்டுமன்றி இலங்கையில் 20 பிராந்திய மன்றங்களை அமைத்து இலங்கை முழுவதும் இப்பணியினை தொடர்ந்து ஆற்றி வந்தார். இன்று திருமறைக்கலாமன்றம் தமிழ்கலைகளின் மையமாக நின்று பணியாற்றிவருகின்றது.

## திருப்பாடுகளின் நாடகப்பாரம்பரியம்.

கிறிஸ்தவர்களின் தவக் காலத்தினையொட்டிய கலை மரபாகிய திருப்பாடுகளின் நாடக மரபானது உடக்குப்பாஸ் என்னும் பொம்மை நாடக மரபில் இருந்து 1954இல் முதன் முதலாக அருட்திரு லோங் அடிகளாரின்

முயற்சியினால் மனிதர்கள் நடிக்கும் நாடகமரபாக ஆரம்பமாகிய முயற்சி. பின்னர் மொழிபெயர்ப்பு நாடகங்களாக வளரந்தது. அம்மரபினை மாற்றி தமிழில் முதன் முதலாக தமிழுக்குரிய வகையில் இதனை எழுதி மரிசேவியர் அடிகளே மேடையேற்றத் தொடங்கினார்.

அதனை படிப்படியாக வளர்த்து 'பாஸ் என்றால் அது மரியசேவியரின் பாஸ்தான்' என்று மக்கள் கூறுமளவுக்கு அம்மரபுக்கு முகவரி அமைத்ததுடன் பல்வேறு பரீட்சார்த்த நாடகங்களை உருவாக்கினார் கல்வாரியில் கடவுள், அன்பில் மலர்ந் அமரகாவியம், களங்கம், பலிக்களம், கடவுள் வடித்த கண்ணீர், சிலுவை உலா, கல்வாரிப்பரணி, கல்வாரிக்கலம்பகம், காவிய நாயகன், வேள்வித் திருமகன்… என 25க்கு மேற்பட்ட பாடுகளின் நாடகங்களை எழுதினார். அத்துடன் நடிப்பு, காட்சிவிதானிப்பு, இசை, ஒலி, ஒளி என ஒவ்வொரு துறையிலும் கவனம் செலுத்தி இன்று உலகத்தரம் வாய்ந்த நாடகமரபாக இதனை வளர்த்தெடுத்திருப்பது மட்டுமன்றி இதனை தொடர்ந்து நிகழ்த்தத்தக்க கலைப் பரம்பரையையும் தோற்றிவித்துள்ளார். வருடந்தோறும் பல்லாயிரக் கணக்கானவர்கள் இதனைப் பார்வையிடுகின்றனர்.

## சமாதானத்துக்கான கலை முயற்சிகள்

தொண்ணூறுகளில் யுத்தம் முனைப்புபெற்ற காலத்தில் தமிழ் மக்களின் பிரச்சினையை தென்பகுதியில் யாரும் பேசமுடியாத காலத்தில் 'கலை என்ற தளத்தில் எல்லா மனிதர்களையும் சந்திக்கச் செய்யமுடியும்' என்ற கொள்கையுடன் சமாதானத்துக்கான பல்வேறு முயற்சிகளையும் மேற்கொண்டார். யுத்தத்தின் பயங்கரத்தினை வெளிப்படுத்தவும் சமாதானத்தின் அவசியத்தினை வலியுறுத்தவும் தலைநகரில் 'வார்த்தைகளற்ற நாடகம்' (Wardless play) என்ற வகைமையை உருவாக்கி. பல நாடகங்களை மேடையேற்றினார். **'புறம்' 'அசோகா', 'தர்ஷனா' 'கி.மு.200'…** போன்ற அவரது நாடகங்கள் தலைநகரில் கணிசமான தாக்கத்தினை ஏற்படுத்தின. 'ஊமம்' முறைமையில் மரியசேவியர் அடிகளினால் பரீட்சார்த்தமாக உருவாக்கப்பட்ட அவ் வடிவம் எந்த மொழி பேசுபவராலும் புரிந்து கொள்ளக்கூடிய, இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய வடிவமாக அமைந்தது. யுத்தத்திற்கு எதிரான கருத்து நிலையைக் கொண்ட அந் நாடகங்களில் தமிழ் சிங்களக் கலைஞர்கள் இணைந்து நடித்தனர். குறிப்பாக **'தர்சனா'** பேராசிரியர் எதிரிவீர சரச்சந்திராவின் குழுவினருடன் இணைந்து தயாரிக்கப்பட்டது. இத்தகைய முயற்சியின் தொடர்ச்சியாக இலங்கை முழுவதிலும் 20 பிராந்திய மன்றங்களை சிங்கள தமிழ் மக்களிடையே உருவாக்கி சமாதானத்துக்கான பல்வேறு முயற்சிகளையும் மேற்கொண்டு வந்தார். பிரபல சிங்கள கலைஞர்களான எதிரிவீர சரச்சந்திரா, ஜெரோம் டி சில்வா, சோமலதா சுபசிங்க, மிராண்டா ஹேமலதா.. போன்ற பலரையும் சமாதான முயற்சிகளில் இணைத்ததுடன் வடக்கிலும் தெற்கிலும் கலைஞர்களின் சமாதான மாநாடுகளையும் ஏற்பாடு செய்திருந்தார். மனமே, சிங்பாகு போன்ற நாடகங்களையும், கண்டிய நடனம் உட்பட தென்னிலங்கைக் கலைகளை கலாசார பரிவர்த்தனையாக வடக்கிலே கொண்டு சென்று மேடையேற்றியவர் இவரே. 2002ஆம் ஆண்டு அமெரிக்காவில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் தாபனத்தின் உலக சிறுவர் மாநாட்டில் இலங்கையில் குறிப்பாக வடபகுதிச் சிறுவர்களின் நிலையை வெளிப்படுத்தும் 'யுத்தத்தின் தொட்டில்' (In Cradle of the War) என்ற வார்த்தைகளற்ற நாடகத்தினை நிகழ்த்தி உலகளவில் பாராட்டப் பெற்றதுடன் தமிழர்களின் பிரச்சனையை உலகறியச்செய்தார்.

இத்தகைய சமாதான முயற்சிகளுக்காகவே 2016ஆம் ஆண்டு 'சமாதானத்துக்கும் நல்லெண்ணத்திற்குமான '**உயர்விருதினை**' இலங்கை ஜனாதிபதி மைத்திரிபாலசிறிசேனா இவருக்கு வழங்கி கௌரவித்தார்.

## வெளிநாட்டுக் கலைப்பயணங்கள்

புலம்பெயர்ந்து பல்வேறு நாடுகளிலும் வாழுகின்ற எம்மவர்களை இணைத்து அங்கு கிளைகளை உருவாக்கியதுடன், திருமறைக் கலாமன்றத்தின் பணிகளை அங்கும் ஆற்றிவந்ததுடன் எம்மவர்களைச் சந்தித்து மண்ணின் உறவுகளையும் கலாசார வேர்களையும் புத்துயிர்ப்புச் செய்யும் வகையிலான பல்வேறு கலாசாரக் கலைப்பயணங்களை அசாத்திமான காலச் சூழல்களிலெல்லாம் பகீரதப் பிரயத்தனங்களின் மத்தியில் மேற்கொண்டு, இங்கிருந்த எமது கலைஞர்களுக்கான சந்தர்ப்பங்களையும் ஏற்படுத்தி இதுவரை 19 தடவைகள் வெளிநாட்டுக் கலைப் பயணங்களை மேற்கொண்டார். இவரது கலைத்தூதுப்பயணங்களை மதித்து யேர்மன் ஆன்மீகப்பணியகம் இவருக்கு 1998ஆம் ஆண்டு 'கலைத்தூது' என்ற பட்டத்தினை வழங்கி கௌரவித்தது.

## அரங்கவியலாளன்

ஈழத்தின் முக்கிய நாடகவியலாளர்களிலொருவராக விளங்குகின்ற மரியசேவியர் அடிகள், நாடக ஆசிரியராக, நெறியாளராக, நாடகத் தயாரிப்பாளராக, அரங்கியல் ஆய்வாளனாக பல்வேறு தளங்களிலும் தடம்பதித்துள்ளார். குறிப்பாக பல்வேறு திருப்பாடுகளின் நாடகங்கள், விவிலிய நாடகங்கள், நாட்டுக்கூத்துக்கள், இலக்கிய நாடகங்கள் நடனநாடகங்கள், எனப் பலவற்றையும் எழுதியுள்ளார். ஐம்பெருங் காப்பியங்களையும் நாடகமாக்கியது இவரின் முக்கியமான பணியாகும். ஈழத்து நாடக வரலாற்றினை இவரைவிடுத்து எழுதமுடியாது என்ற அளவில் இவரது நாடகங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன.

அதுமட்டுமன்றி ஈழத்தின் சிறந்த நெறியாளர்களில் ஒருவராக விளங்கும் இவர் தனக்கென சிறப்பான நெறியாக்கத்திறனைக் கொண்டிருந்தார். நேர்த்திமிக்க பல அரங்கத் தயாரிப்புக்கள் சர்வதேச தரத்தில் இவரால் படைக்கப்பட்டன. அவரைப் பின்பற்றிய மாணவ பரம்பரையொன்று திருமறைக் கலாமன்றத்தில் தொடர்ந்து வருவது மட்டுமன்றி இன்று உலகளாவிய நிலையில் அவர்கள் நாடகங்களைப் படைத்துவருவது குறிப்பிடத்தக்கது. மற்றும் இவர் எழுதிய 'கலைமுகம், 'அரங்கவலைகள்' போன்ற அரங்கியல் ஆய்வு நூல்கள் முக்கியத்துவமுடையவை. உலக அளவில் பலநாடகங்ளைப் பார்வையிட்டவராகவும் உலகப் புகழ்பெற்ற பல அரங்கவியலாளர்களைச் சந்தித்து உரையாடியவராகவும் காணப்பட்டார்.

## கல்விப்புலம்

சிறிய வயதில் இருந்தே கல்வியில் சிறந்துவிளங்கிய இவர் இரட்டை வகுப்பேற்றங்களினால் குறைந்த வயதிலேயே தனது குருத்துவக் கல்வியை முடித்து, 22வயதில் பாப்பரசரின் விசேட அனுமதியுடன் குருவாக திருநிலைப் படுத்தப்பட்டது மட்டுமன்றி, உரோமைப் பல்கலைக்கழகத்தில் இறையியலில் கலைமாணி, முதுதத்துவமாணி, கற்கைகளை தனது இளவயதிலேயே நிறைவுசெய்தார். பின்னர், தமிழகத்தில் மதுரைத்தமிழ்ச் சங்கத்தில் தமிழை சிறப்புப் பாடமாகப் பயின்று 'வித்துவான் புலவர்' பட்டங்களைப் பெற்றார். தொடர்ந்து லண்டன் பல்கலைக்கழகத்தில் வரலாற்றுத்துறையில், முதுகலைமாணி, கலாநிதிப் பட்டங்களைப் பெற்றார். A Catholic-Hindu Encounter என்ற பெயரில் கலாநிதிப் பட்டத்திற்காக மேற்கொண்ட ஆய்வு மிக முக்கியத்துவமுடைதாக விளங்குகின்றது. பின்னர் யேர்மனியிலுள்ள பசாவு பல்கலைக்கழகத்தில் சைவசித்தாந்தத் துறையில் மற்றொரு கலாநிதி பட்டத்தினை யேர்மன் மொழியிலே மேற்கொண்டார். இவைமட்டுமன்றி தமிழ் ஆங்கில மொழிகளில் பல்வேறு ஆய்வுக் கட்டுரைகளையும் மொழியியல், இறையியல், தத்துவவியல், அரங்கியல், என பல்வேறு துறைகளிலும் எழுதியுள்ளார். அதுமட்டுமன்றி ஆங்கிலம், சிங்களம், லத்தீன், இத்தாலியம், கிரேக்கம், எபிரேயம், ஜேர்மன், சமஸ்கிருதம், போன்ற மொழிகளை அறிந்தவராகவும், சில மொழிகளில் மிகுந்த பாண்டித்தியம் பெற்றவராகவும் விளங்குகினார். இவரது பணிகளையும் ஆளுமையையும் மதித்து யாழ்பாண பல்பலகலைக்கழகம் இவருக்கு கௌரவ கலாநிதி பட்டத்தினையும் வழங்கிக் கௌரவித்தது.

## வெளியீடுகளும், கௌரவமும்

நாடகம்பற்றி தமிழில் மட்டுமன்றி ஆங்கிலத்திலும் பல்வேறு கட்டுரைகளை எழுதியுள்ளார். 'கலைமுகம்' என்ற இவரது நூல் அரங்கத் தயாரிப்பு அனுபவங்களை வெளிப்படுத்தும் நூலாகும். அவ்வாறே **'அரங்கவலைகள்'** என்ற இவரது நூல் நவவேட்கைவாத நவீன அரங்கியலாளர்கள் பற்றிய நூலாகும், இதனைவிட 'நகையகம்' இவரது மொழி பெயர்ப்பு நாடகநூல். **'மறைபொருள் நாடகங்கள்'** இவரது 10 நாடகங்களின் தொகுதி.

இவை தவிரவும் பலிக்களம், களங்கம், கன்னிபெற்ற கடவுள், கல்வாரியாகம், சிலுவை உலா, கல்வாரிக் கலம்பகம், காவியநாயகன், வேள்வித்திருமகன்.. என 12 நாடக நூல்கள் வெளிவந்துள்ளன. அவைதவிரவும்'The Life and times of orazio bettachini' , 'A Catholic-Hindu Encounter' 'Jaffna-land of the Lurid' , 'Siddhanta Traditions, Philosopher-sages,' போன்ற ஆங்கில மொழியிலே அமைந்த நூல்களையும் **'சுவைத்தேன்', 'வாகைச்சுடர்', 'காலத்தின் தடங்கள்'**என பல்வேறு நூல்களையும் எழுதியுள்ளார். இவற்றைவிட திருமறைக் கலாமன்றத்தினூடாக 'கலைமுகம்' என்னும் கலை இலக்கிய இதழினை 1990ஆம் ஆண்டுமுதல் பிரதான ஆசிரியராக இருந்து நடத்தி வந்தார். இதுதவிரவும் **Journal of Siddhanta Studies** என்ற சைவ சித்தாந்தத்துக்கான பருவ ஆய்விதழையும், நாடகமும் அரங்கியலுக்கென **'ஆற்றுகை'** என்ற சஞ்சிகையையும் வெளியிட்டு வந்துள்ளார். இதுவரை திருமறைக்கலாமன்றத்தினால் 12 நாட்டுக்கூத்து நூல்கள் பதிப்புச் செய்யப்பட்டுள்ளன. 27 வேதாகம நாடகங்கள் வெளியிடப்பட்டுள்ளன. சிறுகதை, நாவல், கவிதைத் தொகுதிகள், காவியங்கள் எனப் பலவும் பதிக்கப்பட்டுள்ளன. பல ஒலிநாடாக்கள் இறுவட்டுக்கள் வெளியிடப்பட்டுள்ளன. இவ்வாறான பல்தரப்பட்ட பணிகளுக்கும் ஆளுமைக்கும் காரணமாக இருந்தவர் நீ.மரியசேவியர் அடிகளாவார்.

இவரது கலைப்பணியை பலரும் மதித்து கௌரவித்துள்ளனர். யாழ் மாநகர சபை உயர்விருதான 'யாழ் விருதினை' 2013இல் இவருக்கு வழங்கியது. இலங்கைக் கம்பன் கழகம் இவருக்கு 2017ஆம் ஆண்டுக்கான **'கம்பகலாநிதி இராதாகிருணன் விருதினை'** வழங்கியது. டான் தொலைக்காட்சிக் குழுமம் 2019ஆம் ஆண்டுக்கான 'சாதனைத்தமிழன்' விருதினை வழங்கியது. இறுதியாக கடந்த வருடம் இலங்கை கலாசார அமைச்சு நாடகத்துறைக்கான உயர் விருதான 'நாடக கீர்த்தி' விருதினை வழங்கி அவரது அரங்கப்பணியை கௌரவித்துள்ளது.


கலையையே தனது தவமாகக் கொண்டு தனது வாழ்நாள் முழுவதையும் கலைப் பணிக்காகவும் சமூகப் பணிக்காகவும் கரைத்த அடிகளார் விருதுகளால் கௌரவிக்கப் பட்டதனை விட அவரால் இவ்விருதுகள் கௌரவம் பெற்றன என்பதே உண்மையாகும்.

மேன்மைமிக்க பணிகளை ஆற்றி அமரத்துவமடைந்த மரியசேவியர் அடிகளின் எண்ணங்களை வாழ்வதும் அவர் தொடக்கிய பணிகளைத் தொடர்வதுமே அவருக்கு நாம் செய்யும் அஞ்சலியாகவும் இருக்கும். □

## கலையினூடாகக் கடவுளைத் தந்த கலைத்துறவி
# மரிய சேவியர் அடிகளார்



Dr. எல்மர் எட்வேட் Bergen, Norway



மனித இருப்பைப் புரிந்துகொள்ளவும், புரிந்துகொண்டதை அர்த்தபுஷ்டியாக வாழவும் கலைகளும் அதன் ஆற்றுகைகளும் நமக்குத் துணை வருகின்றன. கலைவழியே எம்மை இறைவனோடு இணைக்க, ஆன்மீகத்தை வளர்க்க, மனித நேயத்தை விதைக்கவென நம் மத்தியில் காலத்தால் உதித்தவர், அமரர் அருட்பணி மரிய சேவியர் அடிகளார்.

மறைப்பணிக்கென இறைவனால் தெரிந்து கொள்ளப்பட்டிருந்தாலும் இயல், இசை, நாடகம் எனும் முத்தமிழ் வித்தையினால் மறை வளர்த்துத் தமிழ் வளர்க்கவும், தமிழ் வளர்த்து மறை வளர்க்கவும் தன்னை முழுவதும் தற்கொடைதந்த கலைத்தாயின் செல்லப்பிள்ளையிவர்.

நவீன ஈழ வரலாற்றின் பக்கங்களில் அழுத்தமாக, மிக அழுத்தமாகப் பதியப்பட்டிருக்கும் வரலாற்று நாயகனாம் பேரன்பிற்கும் பெரும் மதிப்பிற்கும் உரிய அமரர் மரிய சேவியர் அடிகளார். இவருடன் இணைந்து பயணிக்க எனக்கு கிடைத்த காலம் குறுகியதேயாயினும், அது என்னில் மிகுந்த தாக்கம் செலுத்தியிருக்கிறது. அக்காலப்பகுதியை சற்றுத் திரும்பி பார்க்க விரும்புகிறேன்.

மரிய சேவியர் அடிகளார் ஈழத் தமிழரின் முகமாய் உலக அரங்குகளில் வலம் வந்தாலும் இலங்கைத் தீவின் சிங்கள, முஸ்லிம் மக்களை கலையின் கருவிகொண்டு நெருக்கமாய் தழுவிக்கொண்டவர். இனக்குரோதம் தறிகெட்டு ஆடிய கொடூர தசாப்தங்களிலும் அரங்குகளிலும் மேடைகளிலும் இனக்குழுமங்களை இணைத்த இயேசுவின் சமாதானத் தூதுவர்!

இலங்கைத் தீவில் தமிழருக்கெதிரான வன்முறை கொழுந்துவிட்டு எரிந்துகொண்டிருந்த நாட்களவை. நெருக்கடியான சூழ்நிலையில், கலையின் கரங்களைப்பற்றியிருந்த அடிகளார் ஒரு நம்பிக்கையின் புள்ளியாய் இருந்தார். சதா இன்முகத்துடனும் ஆழ்ந்த அமைதியுடனும் பிரகாசிக்கும் இக்கலைஞரை நான் முதன்முறையாக சந்தித்தபோது எனக்கு வயது வெறும் பதினைந்தே!

என் அண்ணன் விஜயன் (விஜயன் மாஸ்டர்) உடன் யாழ் திருமறைக் கலாமன்ற நாடக பட்டறை ஒன்றிற்குச் சென்றிருந்தேன். அரங்க அலங்காரம், நடிகர்களின் பேச்சு வன்மை, உடை அலங்காரம் எனப் பலப்பல என் மனதைத் தொட்டன. அன்று அருட்தந்தை மரிய சேவியர் அடிகளார் அங்கு இருக்கவில்லை. எனது அண்ணனிடம் கேட்டு அடுத்த நாளும் பட்டறைக்கு போவதற்கு அனுமதி பெற்றுக் கொண்டேன். அப்பா அம்மாவிடம் உத்தரவு கேட்டால் கிடைக்காது என்று தெரியும். எனவே வீட்டிற்குத் தெரியாமல் அண்ணனோடு நாடக பட்டறைக்கு செல்லும் சந்தர்ப்பங்கள் அதிகரித்தன.

அன்றைய மாலைப் பொழுதில் (சரியான காலம் நினைவில் இல்லை) அருட்தந்தை உடனான முதல் உரையாடல். அது அழியா நினைவாய் மனதில் தங்கிவிட்டது. விஜயன் அண்ணன் அடிகளாரோடு கதைத்துக்கொண்டிருந்தார். நான் தந்தைக்குப் பின்னால் நின்றுகொண்டு அமைதியாய்க் காத்திருந்தேன். தீர்க்கமான அவரின் சொற்களில் இருந்த அமைதி, அறிவு, அழுத்தம் என்னை வசீகரம் செய்திருந்தன. ஆர்வமாய் காத்துக்கொண்டும் அந்தக் காந்தத் தொனியைக் கேட்டுக் கொண்டும் நின்றுகொண்டிருந்தேன். அமைதியான, எளிமையான தோற்றம், தூய்மையான வெள்ளை நிற அங்கியில் ஓர் ஆளுமை. கதைத்துப்பழக வேண்டும்போல ஓர் ஈர்ப்பு.

'தம்பி யாரு? புதுசாய் இருக்கிறார். நாடகம் பார்க்க வந்திருக்கிறீரா?' என்ற கேள்வியோடு என் பக்கம் திரும்பினார். 'ஓம், father. எனக்கு நாடகம் நடிக்கவும் பழக்கவும் விருப்பம். தபேலா, மிருதங்கம் வாசிப்பேன்' என பதில் சொன்னேன். 'அப்படியா, நல்லது, நல்லது' என்று வரவேற்புப் புன்னகை உதிர்த்தார்.

நாடகப் பட்டறைக்கு செல்லும் வாடிக்கை தொடர்ந்தது. அங்கிருந்து அள்ளிக்கொண்ட கலையனுபவப் பாடங்கள் பல. நாடகம் சம்பந்தப்பட்ட விளக்கங்கள், நுணுக்கங்கள், யுக்திகள், பழக்கும் முறைகள், நெறிப்படுத்தும் வித்தைகள் எனப் பலவற்றைக் கற்றுக்கொண்டேன். அருள் தந்தை மற்றும் அங்கிருந்த மூத்த கலைஞர்களிடமிருந்து நாடகக்கலை நுட்பங்களை, அவர்களது அனுபவங்களைத் தெரிந்து கொண்டேன்.

இசை ஆர்வம் இருந்ததால் இசை அறிவும் வளர்ந்தது. பல நாடகங்களில் பின்னணிப் பாடல்களுக்கும் வாசித்தேன். இச்சமயத்தில்தான் திரு.Berminas அவர்களின் உந்துதலால் எழுத ஆர்வம் அதிகரித்தது. விஜயன் அண்ணனுடன் சேர்ந்து பல நாடகங்களை நடித்தேன். இதில் ஷவாள் பேத்தை' என்ற நாடகம் யாழ்ப்பாண வட்டாரத்தில் முதலிடம் பெற்றது.

1983இல் கலவரம் அதிகரித்ததால் அன்றாட செயற்பாடுகளில் குழப்பம் ஏற்பட்டது. வீட்டில் பெரியவர்களிடம் இருந்து என் கலைப் பயணத்தைத் தொடர்வதற்கு அனுமதி கிடைக்கவில்லை. இது நம்மத்தியில் ஒரு வழமையான ஒன்றுதான்! எல்லா வீடுகளைப்போல என் வீட்டிலும், 'முதலில ஒழுங்காப் படி. அதுக்குப் பிறகு நாடகங்களை நடிக்கலாம்' என சத்தம் வைக்கும் பெற்றோரின் ஓயா உபதேசம்!

இனக்கலவரம் என்னை மேடையிலிருந்தும், புலத்திலிருந்தும் பின் நிலத்திலிருந்தும் துரத்திக்கொண்டிருந்தது. அருள்தந்தையுடனான அந்த நெருக்கத்தின் நாட்கள் விரைவில் முடிவுக்கு வந்தன. அந்தக் கலைக்குருவின் காலடியில் இருந்து கற்றுக்கொள்வதற்கு எனக்குக் கொடுத்து வைத்தது அவ்வளவுதான்! அறிவுக்கடலில் நான் கற்றது கைம்மண்ணளவே!

அருட்தந்தையோடு பழகிய நாட்கள் மிகவும் குறைவானாலும், கற்றுத் தேர்ந்த அறிவுமட்டும் பசுமரத்தாணியாய் இன்றும் வாழ்நாட்களை வளம்படுத்திக் கொண்டிருக்கின்றன. இவ்வனுபவங்களால் நோர்வே, பேர்கன் நகரில் பிரமாண்டமாய் மேடையேற்றப்பட்ட ஷபலிக்களம்' அழியாச் சான்றாய் இன்றும் உள்ளது.

எங்கெல்லாம் தந்தையவர்களால் பட்டடை தீட்டப்பெற்ற கலையின் புத்திரர்கள் வலம் வருகின்றார்களோ, அங்கெல்லாம் அடிகளாரின் ஆத்மா நிலைத்து நிறைந்திருக்கும். எங்கெல்லாம் நம் கலைப்பயணம் தொடர்கிறதோ, அங்கெல்லாம் தந்தையவர்களின் மூச்சும் கலந்திருக்கும். எங்கெல்லாம் எமக்கு மேடைகள் வசப்படுகின்றனவோ, அங்கெல்லாம் அருள் தந்தை மரிய சேவியர் அவர்கள் எம்மோடு என்றென்றும் கலையாடுவார்! □



## புதுப்புத்தகம் அறிமுகம்




### அயலாள் தர்மினியின் மூன்றாவது கவிதைத் தொகுதி

தேச எல்லைகள், யுத்தம், நிறவெறி என்பன ஊடுருவிய அகதி மனதின் அகப்பாடல் வடிவம் தர்மினியுடையது.

ஆனால், புகலிட வாழ்வுக்கென்று எழுதி வைத்திருக்கும் பரிதாப அபலைக் கதையாடல் நியதியை மறுத்து, அந்த வாழ்வில் சாத்தியமாகக்கூடிய சுவாரசிய - அசுவாரசியங்களை அவர் பதிவு செய்கிறார். ஆண்களுக்கென்றே ஆகிவந்திருக்கும் அந்நியமாதல் விசாரம் இங்கே அன்றாடத்தின் பரப்பில், குடும்ப நிறுவனத்துக்குள், இலக்கிய நண்பர்களுக்குள், முகநூல் தொடர்புகளுக்குள், சக நகரவாசிகளோடு நடாத்தப்படுகிறது. ஆனால், இதன் விளைவாக அவநம்பிக்கையையோ மானுடவெறுப்பையோ தர்மினி வந்தடைவதில்லை. மாறாக, அபத்த தரிசனத்தை மீறிக் காதலையும் கனவையும் திளைப்பையும், அவற்றைச் சாத்தியமாக்கும் கவிதை எழுத்தையும் தக்கவைத்துக் கொள்ளவேண்டுமென்ற ஏதோ ஒரு தவிப்பால் அவர் உந்தப்படுவதை வாசிக்கிறோம்.
மிக அடிப்படையான இந்த மானுட எத்தனத்தை அகம்கொள்ளும் இக்கவிதைகள் அந்நியத்தின் தொலைதூரத்தைக் கடக்க எத்தனிப்பவை.

-ஹரி இராசலட்சுமி-

வெளியீடு கருப்புப்பிரதிகள்

## EM i fotball for menn 2021




EM i fotball 2021 er det 16. europamesterskapet i fotball for menn som arrangeres av UEFA. EM spilles hvert fjerde år, og skulle opprinnelig arrangeres i juni og juli i 2020, men kunne ikke la seg gjøre på grunn av tilstandene som skyldtes koronapandemien. Dermed ble det besluttet av UEFA å utsette EM i fotball til 2021.

Europamesterskapet arrangeres totalt i tolv forskjellige byer i tolv europeiske land. Det er første gang det er fler enn tre vertsnasjoner, og grunnen til det er at det i 2020 var 60 år siden det første EM i fotball ble arrangert. De tolv vertsbyene er London, Baku, München, Roma, St, Petersburg, Amsterdam, Bilbao, Bukarest, Budapest, København, Dublin og Glasgow. For å delta i Europamesterskapet må alle 55 landslag i UEFA konkurrere i kvalifiseringen, siden det er kun plass til 24 lag i turneringen. Disse 24 lagene blir så delt inn i seks grupper for gruppespillet. Første kamp vil bli spilt 11. juni 2021 og siste kamp vil bli spilt 11. juli 2021.

## பூமியை கடந்து செல்லவுள்ள `2021 AF8` கோள்



மே மாதத்தில் ஓர் சிறுகோள் நமது கிரகத்தை கடந்து செல்லும் என்று விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர் ஒரு கால்பந்து மைதானத்தின் அளவு எனவும் அதனால் 2021 AF8 என்று கோளுக்கு பெயர் சூட்டப்பட்டுள்ளது. விஞ்ஞானிகள் கூற்றுப்படி இக்கோள் மே 4ஆம் திகதி அளவில் பூமிக்கு அருகில் செல்லும் எனவும், இச்சிறுகோள் 260 முதல் 580 மீட்டர் வரை இருக்கும் எனவும் நாசா மதிப்பிடுகிறது. முதன்முதலில் விஞ்ஞானிகளால் மார்ச் மாதமே இக்கோள் கண்டுபிடிக்கப்பட்டது. இந்த விண்கல் AF8 விண்வெளியில் பூமியை கடந்து சென்ற மற்றைய கோள்களை விட மிகச் சிறியது என்று அமெரிக்க விண்வெளி நிறுவனம் கூறுகின்றது. 2021 AF8 என்ற சிறு கோள் பூமிக்கு அருகே வினாடிக்கு 9 கிலோ மீட்டர் வேகத்தில் சென்று கொண்டிருக்கிறது என்று அந்த நாசா நிறுவனம் தெரிவித்துள்ளது.

## கொரோனா நோய்த்தொற்று, நோய்த்தடுப்பு அறிவுறுத்தல்கள் புலம் பெயர்வாழ் மக்களை சென்றடைகின்றனவா?

நோர்வேஜிய மொழியறிவு குறைவான வெளிநாட்டவர்கள் கொரோனா தொற்று நோயினால் அதிகம் பாதிக்கப்படுகின்றனர் எனவும், இதற்காக நோர்வே சுகாதார பணியகத்தினால் கொடுக்கப்படும் அறிவுறுத்தல்களை வெளிநாட்டவரின் ஊடகங்களும் கவனம் செலுத்தி மக்களுக்கு சேவையாற்றும்படியும் சமூக ஒருங்கிணைப்பு மற்றும் பன்முகப்பேணல் திணைக்களம் (IMDI) கேட்டுக்கொள்கின்றது.

அத்துடன் நோர்வே சுகாதார பணிப்பகம் கொரோனா பற்றிய தகவல் மையத்தினை அமைத்துள்ளதாகவும் தகவல் தெரிவித்துள்ளனர். இங்கே ஆங்கிலம், அரபு, சோமாலி, போலந்து உருது மற்றும் நோர்வே மொழிகளில் பதில்களினைப் பெறலாம்.

தொலைபேசி எண்: 815 55 015.
வெளிநாட்டிலிருந்து அழைப்பதற்கு: +47 21898042
போன்ற எண்களில் அழைக்க வேண்டும்.

கொரோனா தொற்றுநோய் நோர்வேக்குள் பரவ ஆரம்பித்த நாளிலிருந்து நோய் தொடர்பான சகல முக்கிய தகவல்களும் நமது தேன் தமிழோசை வானொலியின் தயாரிப்பில் நிகழ்த்தப்பட்டு வருகின்றது. இந் நிகழ்வுகள் தகுதி வாய்ந்த மருத்துவர்கள், சுகாதாரப் பணியாளர்கள், மொழிபெயர்ப்பாளர்கள், அரசியல்வாதிகள், ஆய்வாளர்கள், ஆசிரியர்கள், பலரும், மற்றும் கல்வியாளர்கள், ஆன்மீக குருக்கள், உளவியல்த்துறையினர், இளையோர், மாணவர்கள் எனப் பல தரப்பினருடனும் நேர்காணல்கள், உரையாடலினை நடாத்தி வானொலி, bergentamil.com இணையதளம், norwayradiotamil.com இணையத்தளம் மற்றும் பல்வேறு சமூக வலைத்தளங்கள் ஊடாகவும் நோய்த்தொற்று தொடர்பாக அரசு, நகராட்சி, சுகாதார பணியகம் போன்றவற்றின் தரவுகளை தமிழ்மொழியிலே சிறப்பாக மொழிபெயர்த்து மக்களிடம் சேர்த்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.




மொரோக்கோ 99% முஸ்லிம் நாடாகும். அந்த நாட்டின் முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டத்தின் படி ஆண் ஒருவர் இரண்டாவது திருமணம் முடிக்க வேண்டுமாயின் அவர் மூன்று விடயங்களை ஹாதிநீதி மன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும்.


1) அவர் தன்னுடைய முழுமைப்படுத்தப்பட்ட வைத்திய அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும். குறிப்பாக அவரது உடல் உளம் சார்ந்த முழுமைப்படுத்தப்பட்ட அறிக்கையை அவர் சமர்ப்பிக்க வேண்டும்.

2) அவருடைய மாதாந்த வருமானம் சொத்து விபரங்களின் உறுதிப்படுத்தப்பட்ட அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும்.

3) முதல் மனைவியை அவர் எப்படி கவனித்து பராமரித்து வருகின்றார் என்ற அறிக்கை. அதோடு இரண்டாவது மனைவியுடைய குடும்பப் பின்னனி அனைத்தும் அறிக்கைப்படுத்த வேண்டும்.

இவை போக அறிக்கைகளை அவர் சமர்ப்பித்தாலும் இறுதியாக முதல் மனைவியின் அனுமதி கட்டாயம் கேட்கப்படும் அதாவது முதல் மனைவியிடம் 'நீ உன் கணவனுடைய இரண்டாவது திருமணத்தை ஏற்றுக் கொள்கின்றாயா அல்லது கணவனை விட்டு விலகப் போகின்றாயா' என்று. இதன் போது முதல் மனைவி கணவனது திருமணத்தை ஏற்றுக் கொள்ளவில்லை அவரை விவாகரத்து செய்கின்றேன் எனக் கேட்டால், ஹாதியார் இறுதியாக முதல் மனைவியிடம் நஸ்ட ஈடாக எவ்வளவு உனக்கு வேண்டும் எனக் கேட்டு முதல் மனைவி கேட்கும் நஸ்ட ஈட்டை மீள் பரிசீலனை செய்து ஒரு தொகையை தீர்மானிப்பார். அந்தத் தொகையை ஒரு மாத காலத்தில் அந்த கணவர் முதல் மனைவிக்கு கொடுத்தாக வேண்டும். அவர் அந்த தொகையை ஒரு மாத காலத்தில் செலுத்தவில்லை எனில் இரண்டாவது திருமணத்திற்காக அவரால் சமர்ப்பிக்கப்பட்ட அனைத்து ஆவணங்களும் இரத்துச் செய்யப்படும். ஆனால் அந்த ஆண் இந்த வழிமுறைகளை பின்பற்றாமால் திரட்டுத்தனமாக இரண்டாம் திருமணம் முடித்தால் அவர் சிறைப்படுத்தப்படுவார்.

-Bisliya Bhutto-




Tallene er usikre og scenariet gir et foreløpig bilde basert på den informasjonen vi har nå. Kalenderen bygger på forventet leveranse og distribusjon av vaksiner fra Pfizer BioNTech, Moderna og AstraZeneca. Vaksinasjonsscenariet viser et forenklet nasjonalt gjennomsnitt hvor vi antar at anbefalte prioriteringer blir fulgt nøye og at kommunene vaksinerer i samme tempo. Det er foreløpig ikke besluttet hvordan koronavaksine skal tilbys til friske personer i alderen 18-44 år.

Prioriteringsrekkefølgen av risikogruppene:

1. Beboere i sykehjem
2. Alder 85 år og eldre
3. Alder 75-84 år
4. Alder 65-74 år

og samtidig personer mellom 18 og 64 år med sykdommer/tilstander med høy risiko for alvorlig forløp (merket med * i listen over risikogrupper under)

5. Alder 55-64 år med underliggende sykdommer/tilstander (se listen over risikogrupper under)
6. Alder 45-54 år med underliggende sykdommer/tilstander
7. Alder 18-44 år med underliggende sykdommer/tilstander
8. Alder 55-64 år
9. Alder 45-54 år

Folkehelseinstituttet anser at aldersinndelingen følger alderskohortene per år, dvs at personer som er født i samme år tilbys vaksine samtidig.
Prioritering av helsepersonell parallelt med risikogruppene:
Inntil 20 % av tilgjengelige vaksiner i kommunene kan gis til utvalgte grupper av helsepersonell i primærhelsetjenesten. Disse vaksineres parallelt med de ulike prioriteringskategoriene av risikogrupper. Utvelgelse av helsepersonell gjøres etter de samme kriteriene som ble definert i januar 2021:

Risikogrupper

Personer med følgende sykdommer/tilstander er definert som medisinske risikogrupper:

- Organtransplantasjon*
- Immunsvikt*
- Hematologisk kreftsykdom siste fem år*
- Annen aktiv kreftsykdom, pågående eller nylig avsluttet behandling mot kreft (spesielt immundempende behandling, strålebehandling mot lungene eller cellegift)*
- Nevrologiske sykdommer eller muskelsykdommer som medfører nedsatt hostekraft eller lungefunksjon (for eks. ALS, cerebral parese og Downs syndrom)*
- Kronisk nyresykdom eller betydelig nedsatt nyrefunksjon*
- Kronisk leversykdom eller betydelig nedsatt leverfunksjon
- Immundempende behandling som ved autoimmune sykdommer
- Diabetes
- Kronisk lungesykdom, inkludert alvorlig astma som har medført bruk av høydose-inhalasjonssteroider eller steroidtabletter siste året
- Fedme med kroppsmasseindeks (KMI) på 35 kg/m$^2$ eller høyere
- Demens
- Kroniske hjerte- og karsykdommer (med unntak av høyt blodtrykk)
- Hjerneslag

Annen svært alvorlig sykdom kan også gi økt risiko for alvorlig forløp av covid-19. Vaksinasjon i slike tilfeller vurderes individuelt av lege.

*Disse sykdommer/tilstander kan gi en høy risiko for alvorlig forløp og død også hos yngre.

Hvem kan få koronavaksine og når forventer vi å kunne vaksinere ulike grupper? - FHI




தற்போது நாடுபூராகவும் கட்டம் கட்டமாக தடுப்பூசி போடப்பட்டு வருகிறது. தடுப்பூசி போட்டவர்களும் தொற்றுக் கட்டுப்பாட்டு விதிகளையும், ஆலோசனைகளையும் பின்பற்ற வேண்டியது மிக அவசியமாகும் என சுகாதாரப்பணியகம் வலியுறுத்துகின்றது. தடுப்பூசிகளின் தொழிற்பாடுகளை நோக்கினால் அவை நோயை தடுப்பது மட்டுமல்லாது, தொற்றுகளையும் தடுக்கும் எனலாம். ஆனால் எந்த அளவுக்கு நோய்க்கு எதிராக தடுப்பூசி போராடுகிறது என்பது இன்னமும் புலப்படாமல் உள்ளது எனவும் தெரிவிக்கப்படுகிறது. ஒரு மீட்டர் இடைவெளியினை பேண முடியாதவர்கள் முகக்கவசம் (Maske) பயன்படுத்த வேண்டும். அத்துடன் பொதுப் போக்குவரத்தை பயன்படுத்துபவர்களும் Maske பயன்படுத்துதல் அவசியம்.

20 வயதுக்குட்பட்ட சிறுவர் மற்றும் இளையோர் உடற்பயிற்சி, கலைப்பயிற்சிகளில் ஈடுபடலாம். வெளிநாட்டு, உள்நாட்டு பயணங்களைத் தவிர்ப்பது மிகவும் நல்லது. அவசியமான பயணத்தை மட்டும் மேற்கொள்ளலாம். விடுதிகளுக்கு பயணம் செய்வதை மேற்கொள்ளலாம். ஆனால் பொதுப் போக்குவரத்துகளை தவிர்த்தல் நல்லது.
வேலை மற்றும் கல்விக்கான பயணங்கள் அவசியமான, தேவையான பயணங்களாக கருதப்படுகின்றது. சமூகத் தொடர்புகளினை மட்டுப்படுத்தும் படி பரிந்துரைக்கின்றனர். கூட்டுக் குடும்பமுறையினை கடைப்பிடிக்கும் சமூகத்தினரிடையே கொரோனா தொற்று அதிகம் பரவியுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. கைகளைக் கழுவி எப்போதும் சுத்தமாக இருத்தல் அவசியம். நோய்க்கு உட்பட்டவர்கள் வீட்டிலேயே இருத்தல் முக்கியமானது.






# பெண்தலைமைக் குடும்பங்களின் வாழ்வாதாரப் போராட்டம்

ப்ரியமதா பயஸ்



இலங்கையில் இருக்கின்ற இனரீதியான குழப்ப நிலைகள் இன்னமும் நீங்கிய பாடில்லை - எரியும் நெருப்பில் எண்ணெய் ஊற்றுவது போல் முப்பதுக்கும் மேற்பட்ட வருடங்களாக தொடர்ந்து நடந்த போரில் பாதிக்கப்பட்டவர்கள் வாழ்க்கை நிலை சொல்லொணாத் துன்பத்தின் பெருநிலை.

உலக நாடுகளில் எல்லாம் நடந்த யுத்தங்கள் ஓய்ந்த பின்னும் அதிக பாதிப்புகளை எதிர்கொண்டவர்கள், கொள்கிறவர்கள் பெண்கள்தான். அந்த சூழ்நிலைக்கு இலங்கை விதிவிலக்கல்ல. வளர்ந்து வரும் பொருளாதார நெருக்கடி கொண்ட ஒரு நாடாக இலங்கை இருப்பதால் போருக்குப் பின்னரான பெண்களின் வாழ்வியல் மிக நெருக்கடியாகவே உள்ளது. அதிலும் பாதிக்கப்பட்ட பெண்களின் வாழ்க்கை மிகுந்த துயரமானது.



போரின் ஒவ்வொரு காரணங்களாலும் வாழ்க்கைத் துணையை இழந்த பெண்கள் இலங்கையில் அதிகமானவர்கள். அவர்கள் அடையும் வாழ்வியல் போராட்டங்களும் மிக அதிகமானவை - இறுக்கமான கலாசார ஒழுங்குமுறைகள் பின்னிப் பிணைக்கப்பட்டுள்ள இலங்கையில் விதவைகள் என்ற குறியீட்டால் அழைக்கப்படும் பெண்களின் நிலைமை மிக மோசமானது - பல்கலாச்சார சூழல் பெண்ணிய கட்டமைப்புக்கள் இந்த இக்கட்டான பெண்களின் வாழ்வியலை இன்னமும் அதிகமாக பாதிக்கின்றது என்றே சொல்ல வேண்டும்.

ஓரளவு கல்வி அறிவு கொண்ட பெண்கள் இந்த சமூக சூழ்நிலைகளைத் துண்டாடி வாழ்க்கையில் பிடிமானமான தூண்களைப் பிடித்து சற்று நகர்கின்றனர். ஆனால் பெருமளவான கல்வியறிவு குறைந்த பெண்களின் வாழ்வியல் போராட்டமாகவே இன்றும் இருக்கிறது.

இலங்கை உட்பட பல ஆசிய நாடுகளில் முப்பது வருடங்களுக்கு முன்னர் இருந்த கல்வி, தொழில்நுட்பம், கலாசார விருத்தி, பெண்களுக்கான கல்வித் தன்மை என்பது போர் ஆரம்பித்த காலத்தில் இருந்து இலங்கைப் பெண்களை பாதிக்கும் காரணிகளாகவே இருந்துள்ளன.

அவை தொடரான பெண் தலைமை குடும்பங்களின் போராட்டமான வாழ்க்கைக்கு வழிவகுத்தது என்றே சொல்ல வேண்டும்.

உதாரணமாக போரில் கணவனை இழந்த பெண்கள், கணவன் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட நிலையில் வாழும் பெண்கள், போராட்டத்திற்கு கணவருடன் இணைந்து தானும் போராடிய பெண்கள், போரில் அங்கங்களை இழந்த சாதாரண பெண்கள், போராடி அங்கவீனர்களாக இருக்கின்ற முன்னாள் போராளிப் பெண்கள் என அனைவரும் எதோ ஒரு வகையில் மிக நெருக்கடியான வாழ்க்கையையே எதிர்கொள்கின்றனர்.



அவர்களின் பொருளாதார சிக்கல் நிலைகள் எண்ணில் அடங்காதவை. காலம்காலமாக புரையோடிப்போய் உள்ள கலாசாரத்தையும் பெண்களுக்கான கட்டமைப்புகளையும் சாதாரண பெண்கள் சமாளித்து ஓரளவு நகர முடிந்தாலும் பாதிக்கப்பட்ட சூழ்நிலையில் இருக்கும் மேற்குறிப்பிட்ட பெண்கள் அடுத்த கட்டத்துக்கு நகர்தல் என்பது முயல் கொம்பாகவே உள்ளது.

காரணம் இலங்கை அரசியல் போக்கும் அரசின் பாராமுகமும் என்றே சொல்ல வேண்டும். ஒவ்வொரு கிராமத்திலும் நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் பெண் தலைமைத்துவ குடும்பங்களாகவே உள்ளனர். அவர்களின் பொருளாதாரம் என்பது திட்டமிடப்படாத அரசால் சீராக வழிநடத்தப்படாத பாராமுகமான வாழ்க்கைச் சூழலைக் கொண்ட நிலையாகத்தான் இருக்கிறது. கிட்டதட்ட தற்போது 60 வயதில் இருக்கும் துணையிழந்த பெண்ணும் 35- 40 வயதுக்குள் இருக்கும் துணையிழந்த பெண்ணும் ஒரே மாதிரியான சூழ்நிலையால் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.
இவர்கள் சுமக்கும் குடும்ப சுமைக்கு ஆக்கபூர்வமான கருத்துருவாக்கத்தை இலங்கை அரசு செய்யவில்லை என்பது துயரமான விடயம்.

வெறுமனே தொழில்வாய்ப்பு என்ற ஒரு செயற்பாடு மட்டும் அவர்களின் வாழ்க்கைக்கு சரியான களம் இல்லை. தொடர் பயிற்சிகள் உளவியல் சார்ந்த செயற்பாடுகள் எல்லாம் தற்போதுவரை அவசியமான இன்றியமையாத தேவைகளாகவே உள்ளன.

இவை சீராக இல்லாத பட்சத்தில் அவர்களின் போராட்டமான வாழ்க்கைப் பக்கம் இன்னமும் சிக்கலாகவே உள்ளது. தமது குழந்தைகளின் கல்விக்காகவும் உணவுக்காகவும் அவர்கள் மிகக் கடினமான, பாதுகாப்பு இல்லாத பல தொழில்களைச் செய்ய வேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றனர்.

பாதுகாப்பற்ற தொழில்களை அவர்கள் செய்வதனால் அவர்களை நம்பி இருக்கின்ற குழந்தைகளின் எதிர்காலம் தொடர்பில் பெரும் அக்கறை காட்ட வேண்டிய சூழல் சமூகத்துக்கும் அரசுக்கும் இருப்பதை யாரும் கண்டு கொள்வதாக இல்லை.

இலங்கையிலுள்ள பெண்களின் பிரச்சினைகள் வடக்கு கிழக்கு மட்டுமல்லாமல் தெற்கில் உள்ள பெண்களின் பிரச்சினைகளும் ஆராயப்பட்டு, ஒரு தேசியப் பிரச்சினையாகப் பார்க்கும் சமூகப்பார்வையுள்ள தலைமைகளும் பெண்களும் செயற்பாட்டில் இறங்க வேண்டும். பெண்கள் அதற்கான அமைப்புக்களை உருவாக்கிப் போராடவேண்டும். பெண்களால் நடாத்தப்படும் பல அமைப்புகள் அங்கொன்றும் இங்கொன்றுமாய் இருக்கின்றன. இந்த அமைப்புக்களின் குரல்கள் பெண்களின் நெருக்கடியான சூழலைப் போக்க ஒன்று சேர்ந்து ஒலிக்க வேண்டிய தேவை உள்ளது என்பதை அனைவரும் உணரவேண்டும். □




Dr. விமலநாதன் MD PhD
(Senior Consultant Cardiologist, Oslo, Norway)

அண்மையில்தான் bypass செய்து கொண்டேன். என் போன்ற அறுவைச் சிகிச்சை செய்துகொண்ட நோயாளிகளுக்கான ஆலோசனைகள் தந்து உதவ முடியுமா?
(உணவுப் பழக்கவழக்கம், சரியான உடற்பயிற்சித் தேர்வுகள் போன்றவைகளையும்)

குருதிக்குழாய்களில் அடைப்பேற்பட்டு மார்படைப்பேற்படுவதற்கு, பரம்பரை இயல்புகள், வயது மற்றும் நாம் தெரிந்தெடுக்கும் ஆரோக்கியமற்ற வாழ்வுமுறை என்பன காரணங்களாகக் கூறப்படுகின்றன. இவற்றில் பரம்பரையாக எமக்கு கடத்தப்படும் இயல்புகளையோ, வயதையோ நாம் தீர்மானிக்கவோ அல்லது கட்டுப்படுத்தவோ முடியாது. ஆனால் ஒரு ஆரோக்கியமான வாழ்க்கை முறையை தெரிந்தெடுக்கும் முழு உரிமையும் எங்கள் ஒவ்வொருவரின் கையி-லேயே உள்ளது.
ஆரோக்கியமற்ற வாழ்வுமுறை எது?
- புகைப்பிடித்தல்
- ஆரோக்கியமற்ற உணவுப்பழக்கவழக்கம்
- அதிக கொழுப்பு நிறைந்த உணவுகளை உட்கொள்ளல்
- நேரகாலமின்றி எதேச்சையாக உணவருந்தல்
- ஆரோக்கியமற்ற சிற்றுண்டிகளை கொறித்தல்
- நாளாந்த மதுபாவனை
- நிறையுணவு அருந்தாமை
- உணவில் போதியளவு காய், கறி, பழங்கள் சேர்த்துக் கொள்ளாமை
- உடற்பயிற்சியின்மை
- போதிய நித்திரையின்மை
- எப்போதும் பதட்டநிலையில் இருத்தல்
- இயந்திரவாழ்வும், மனச்சோர்வும்.
- நீரிழிவுநோய், இரத்தஅழுத்தம் போன்றவற்றை அலட்சியப்போக்குடன் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கத் தவறுதல் போன்றவற்றை புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களுடைய ஆரோக்கியமற்ற வாழ்க்கைமுறையாகக் கொள்ளலாம்.

ஆரோக்கியமான உணவுப் பழக்கவழக்கங்களையும், வாழ்வுமுறையையுமே நலவாழ்வின் அடிநாதமாககொண்டு வாழ்ந்த பாரம்பரியத்தை கொண்ட ஒரு இனத்தின் பிரதிநிதிகள் நாம். எனவே மேற்குறிப்பிட்ட விடயங்களை எவ்வாறு கடைப்பிடிப்பது என்பதுபற்றி நான் விளக்கமளிக்க வேண்டியதில்லை. ஒவ்வொரு தனிநபரும் தான் கடைப்பிடிக்க வேண்டிய அல்லது திருத்திக் கொள்ள வேண்டிய விடயங்கள்பற்றி சுயமாக சிந்திப்பதே வருமுன் காப்பதற்கும், வந்தபின் காப்பதற்குமான முதற்படி.

-----------------------------------------------------

அடுத்த இதழில் எமது வாசகரின் இந்தக் கேள்விக்கு விளக்கமளிக்கிறார் மருத்துவர் விமலநாதன்.

எனக்கு bypass அறுவை சிகிச்சை முன்னர் செய்யப்பட்டது. 5வருடங்கள் நல்ல சுகமாக இருந்தது. அதேவேளை இரண்டு வருடங்களுக்கு ஒரு தடவை அடைப்பு எடுத்து பின்னர் stent வைக்கப்பட்டுள்ளது. அண்மையில் எனக்கு இடதுபுறத்தில் பக்கவாதம் ஏற்பட்டு வலப்பக்கம் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது.
எனது இருதய நோய்க்கும் பக்கவாதத்துக்கும் தொடர்பு இருக்கிறதா?

பக்க வாதத்தின் பின் எனக்கு உடலில் பல பக்கங்களிலும் நோவு-கள் ஏற்படுகிறது. பல வகை மருந்துகள் தரப்பட்டுள்ளது. அவற்றை தொடர்ந்து பாவிக்க வேண்டுமா?

●

**Radio Tamil Bergen Then Tamil Osai**
Organisasjonsnummer: 980305414

NRT
Norway Radio Tamil
தேன் தமிழ் ஓசை
30 ஆண்டுகள் நெடும்பயணம்

Ansvarlig redaktør: Julius Antonipillai
Adresse: Krohnegården 5b, 5146 Fyllingsdalen.

Telefon: 924 636 74
E-Post: ttoosai@gmail.com / antonipillai@hotmail.com




Gjerde & Rekkverk
Glassrekkverk
Porter
Balkonger
Baldakin & Takoverbygg
Rustfrie deler
Håndløper & Gelender
Lakkerte deler
Skruer, Bolter & Verktøy
Øvrige Produkter

Kontakt: Hardanger vegen 539,
5268 Haukeland.
E.Post: post@smihuset.no
Telefon: 41 07 07 07

FOOD WAYS
INTERNASJONAL DAGLIGVARER



Kontakt tlf: 46419807
Åpningstider: Man- lør: 10:00-18:00, Søn :Stengt
Lodin Leppsgate 1, 5003 Bergen







Hei, Jeg heter Thanoosh og fyller 13 år nylig. I fjor måtte vi avlyse bursdagsfeiringen min på grunn av korona. Nå er det gått over ett år, men corona viruset lever fremdeles med oss.
I år feiret vi en litt annerledes bursdagsfeiring. Vi samlet hos tanten min som har mye større plass. Bare de nærmeste familien. Vi spiste god mat, kake og is.
Det som var annerledes. Vi hadde påske verksted. Barn og voksne var samlet rundt et bord og hadde noen kreative timer. Vi måtte påske kyllinger og lagde fine malerier. Det var faktisk veldig veldig gøy. -Thanosh 13 år-

Marcus 4 år.

I påsken kommer påskeharen hjem til meg og gjemmer påske egg.

Påskeharen er redd for mennesker og derfor kommer han når vi sover.
Jeg får et stort påske egg.

-Marcus-



Olai 5 år.



Påsken er påskehare. Da skal jeg og mamma lete påske egg i hagen.

-Olai-




பாஸ்க்கா விடுமுறை Fabio Pragash (9 år)



பாஸ்கா விடுமுறையில் கோவிலுக்குச் சென்றோம். வீட்டிலே அம்மாவுடன் சேர்ந்து சிலுவைப்பாதை, செபமாலை, செபங்கள் சொல்லி இயேசப்பாட பாடுகளைத் தியானித்தோம். நானும் தம்பியும் பாஸ்கா முட்டைகள் வரைந்தோம். கடைக்குச் சென்று påske முட்டை, இனிப்பு வாங்கினோம். ஒவ்வொரு நாளும் மைதானத்திற்குச் சென்று பந்து விளையாடுவேன். அம்மாவுக்கு உதவி செய்வேன். அம்மாவின் உதவியின்றி நானே கேக் செய்தேன்.


நாங்கள் எல்லோரும் வீட்டில் Popcorn, சிப்ஸ் சாப்பிட்டு படம் பார்த்து விட்டு, பிறகு படுக்கைக்குச் சென்று கதைசொல்லி விளையாடி விட்டு பிந்தி படுப்போம். மொபிலில் விளையாடுவேன். பியாணோ போடுவேன். நண்பர்களுடன்.
தொலைபேசியில் கதைப்பேன். கொரோனா தொற்றுக் காரணத்தினால் பாடசாலை நண்பர்களை சந்தித்து சேர்ந்து விளையாடி கொத்தரி சாப்பிட முடியவில்லை. குளத்தடிக்குச்சென்று புறாக்களுக்கு சாப்பாடு போட்டு விளையாடினேன்.

Fabio Pragash (9 år)




இயூஜின் வின்சென்ற்
(கருணா) Eugin Vincent

புகைப்பட,
ஓவியக் கலைஞர்
கரவெட்டி - கனடா




அன்று 11.01.2019.

எதிர்பாரா நிகழ்வாக நண்பர்களால் இரகசியமாக ஏற்பாடு செய்யப்பட்ட தனது ஐம்பதாவது பிறந்தநாள் கொண்டாட்ட இன்ப அதிர்ச்சியிலிருந்து அவன் மீளவில்லை. நீண்டகாலம் தொடர்பிழந்து போயிருந்த பல பாடசாலை நண்பர்கள் ஒன்றுகூடி அன்றவனை மகிழ்ச்சியின் முகட்டுக்கே எடுத்துச் சென்றிருந்தனர்.

ஓவியர் ட்ரொஸ்கி மருது (Trotsky Marudu) போன்ற பெரும் கலைஞர்கள் பிரத்தியேகமாக அனுப்பிவைத்த வாழ்த்து மடல்களை பலதடவைகள் தடவிப் பார்த்து மகிழ்ந்தது மட்டுமல்லாது, தனது நெருங்கிய நண்பர்களுக்கும் அவற்றை அனுப்பிப் பெருமிதம் கொண்டிருந்தான்.
பதினோராம் நாள். 22.02.2019 அவனது மரணச்செய்தி தமிழ்ச் சமூகத்தை ஒருகணம் அசையாமல் நிறுத்தி வைத்தது.

கருணாவின் பலவேறு சமூக முயற்சிகளில் ஒன்று, எமது இளைய தலை முறையினருக்கென மதம், மொழி, பிராந்தியம், எல்லைகள் என்ற பேதங்களையெல்லாம் புறந்தள்ளி தன்னார்வத்துடன் முன் வந்து, ஒரு பொது உரையாடல், கருத்துப்பரிமாறல் களம் அமைத்தல் மூலம் அவர்களை களப்பணியாளர்களாக இயங்க வைத்தல். இதனூடாக சமூகங்களுக்கிடையிலான ஐக்கியத்தைக் கட்டுதல்.
அந்த ஒன்றுகூடற் களம் தன்னியல்பாகவும், மிகுந்த ஆரோக்கியமாகவும் இயங்கிக் கொண்டிருந்தது. அதில் இயங்கிக் கொண்டிருந்த அத்தனை இளம் நண்ப நண்பிகள் கருணாவின் மறைவைக் கேட்டு பெரும் அதிர்ச்சிக்கு உள்ளானார்கள். நம்ப மறுத்தார்கள்.
(இன்றும் அவர்கள் சுதந்திரமான கருத்துப் பரிமாறல்கள் மூலியமா இயங்கிக் கொண்டிருக்கிறார்கள்)


ஓவியர் மார்க் மாஸ்டர்

கருணா புகைப்படக் கலைஞர் என்பதற்குமுன் அவர் ஒரு சிறந்த ஓவியர். மறைந்த மார்க் மாஸ்டரின் மாணவர்களில் ஒருவர். புகைப்படக் கலை மீதான ஆர்வத்தைத் தூண்டியதும் இந்த ஓவியக்கலை என்று சொல்வதே சரியானதாகும்.
ஓவியம், புகைப்படம் என்று மட்டும் தன்னை மட்டுப் படுத்திக் கொள்ளாமல் கணினிவரைகலை, ஒலி, ஒளிப்பதிவு, அரங்க ஒளி, ஒலியமைப்பு என்று தனது கலை ஈடுபாடுகளை விரிவாக்கம் செய்தது பட்டுமல்லாது, அக் கலைகளில் கை தேர்ந்த ஓரிடத்தை உருவாக்கிக் கொண்டார்.

குறிப்பாக, கூத்து அரங்காற்றுகைகளுக்கான துல்லியமான ஒலி, ஒளியமைப்புக்களை நான் நேரிலும் பார்த்து வியந்திருக்கிறேன். அவைபற்றி தாய்வீடு பத்திரிகையில் (கனடா) எழுதியுமிருக்கிறேன்.
மேற்படி இந்த எல்லாத் துறைகளுக்குமான மூல ஊற்றாக, இருந்தது கருணாவின் ஓவியக் கலைதான்.








ஓவியக்கலையின் பின்புலத்திலிருந்தே கருணாவின் புகைப்படங்களும், அரங்காற்றுக்கான ஒளியமைப்பும், கணினி வரைகலை போன்றவையும் கட்டமைக்கப் படுகின்றன என்பதை இவரது இந்த எல்லாமுமான படைப்புக்களைப் பார்த்தாலே நம்மால் புரிந்துகொள்ள முடியும். ஒரு அரங்கத்தை வெளிச்சங்களைக் கொண்டே ஓவியப் பின்புலமாக ஆக்கிவிடும் கற்பனைத் திறன் கைகூடி வரப்பெற்றவர்.

500இற்கு மேற்பட்ட நூல்களுக்கான முகப்புக்களை வடிவமைத்துத் தள்ளியிருக்கிறார் என்றால் இது அவ்வளவு இலகுவான கருமமல்ல.
இது புகைப்படக்கலை பற்றிய பதிவு என்பதாக இருந்தாலும்கூட, கருணாவின் ஏனைய இந்தக் கலை வெளிப்பாடுகளையும் தொடாமல் கடந்து செல்ல முடியவில்லைத்தான். ஏனெனில் இருட்டோடும் வெளிச்சத்தோடும் தொடர்பு பட்டவை. ஒன்றுக்கொன்று அருகருவானவை. தோல்வாத்தியக் கருவிகளின் பாடபோதனைகள் வெவ்வேறாக இருந்தாலும், ரிதங்கள் (தாளலயம்) ஒன்றென்றானது போல.

கடந்த இதழில் புகைப்படக் கலைஞர் ஜெயந்தன் நடராஜா பற்றிய பதிவில் இப்படிக் குறிப்பிட்டிருந்தேன்:-
'மறைந்த கருணா வின்சென்ற்றின் படங்கள் பற்றி உரையாடும்போது, கோப்பை நிறைய இருட்டைக் குவித்து, ஒருசொட்டுக் காரக் குழம்புபோல் ஒளியை ஊற்றிக் குழைக்கும் பக்குவம் கருணாவினுடையது என்பேன்' என.

ஆமாம், மிகக் குறைந்த ஒளியை மட்டும் உள்வாங்கி, கருணா கட்டமைக்கும் காட்சிகளில் வெளிச்சக் கணக்குப் பார்க்க நமக்கு இடமே இருக்காது. காரணம், அவர் கட்டமைக்கும் காட்சி எதைச் சொல்ல வேண்டுமோ அதை மேம்போக்காக இல்லாமல் தெளிவாகவே நம்முள்
பதியச் செய்து விடும். காட்சிகள் நமக்குள் நகர்ந்துகொண்டே இருக்கும். அதற்குள் நாம் லைட் அடித்துத் தேடிப் பார்க்கும் தேவை எதுவும் இருக்காது.





பல்வேறு ஓவியக் கண்காட்சிகளை நடாத்தியதுமல்லாமல், நண்பர்களை ஓவியக் கலையின்பால் தொடர்ந்து இழுத்துச் சென்று கொண்டிருந்தார்.
மிக நட்போடும், செல்லமாகவும் ஓவியங்களை ரசிக்கும் கட்டாயத்துக்கு அழைத்துச் செல்வார்.
இதனைப் பல நண்பர்கள் பதிவு செய்திருக்கிறார்கள்.
என்னையும் அப்படித்தான்.
ஓவியங்களை சாதாரணமாக இரசிப்பேன்.

பத்திரிகைச் செய்திக்காகப் பல ஓவியக் கண்காட்சிகளைப் படமெடுத்திருக்கிறேன். ஆனாலும் நின்று நிதானமாக, கலை நுணுக்கங்களை சரிவர உள்வாங்கி இரசிக்குமளவு பொறுமையில்லாது இருந்திருக்கிறேன்.

நோர்வேஜிய ஓவியர்கள், அவர்களது ஓவியங்கள் பற்றிய சில பதிவுகளை எழுதுமளவுக்கு என்னைக் கருணா உருப்பெற வைத்தார் என்பதை நினைக்கும்போது மிகுந்த ஆச்சரியம்தான்.

புகைப்படக்கலை, ஓவியக்கலை, அரங்காற்று, வரைகலை போன்ற கலைகளை அடுத்த தலைமுறையிடம் சேர்க்க வேண்டும் என்பதில் தொடர்ந்து இயங்கி வந்தவர் என்பது கனடாவாழ் தமிழர்கள் அறிவார்கள்.



மிக நுட்பமாக ஒளியைக் கையாளும் வல்லபமுள்ள கலைஞர்களால் தான் எதிர்-ஒளியைப் பயன்படுத்தி காட்சியை இன்னொரு பரிமாணமாக சிறப்புறக் கொணர முடியும்.
அத்தகைய நுட்பத்தைக் கருணாவின் அநேக படங்களில் நாம் அவதானிக்கலாம்.
இந்த எதிர்-ஒளியைப் பயன்படுத்தும் போது காட்சிகள் இருளாகும் வாய்ப்புகளே அதிகம். அப்படிக் காட்சி இருளுக்குள் அமிழ்ந்திப்போகாமல், கலைத்துவமாக மட்பாண்டம் செதுக்கும் கலைஞனின் லாவகத்துடன் எதிர்-வெளிச்சத்தை கையாளும் பவ்வியமும், கெட்டித்தனமும் இருப்பதைக் கருணாவின் படங்களில் நாம் கண்டு கொள்ள முடியும்.

வண்ணக் கலவைகளோடு ஓவியனாகப் புரண்டெழும் கலைஞனாய் இருந்தபோதும், புகைப்படக் கலை எனும்போது கறுப்பு வெள்ளையில் எல்லா வண்ணங்களையும் கைகொள்ளா அளவில் அள்ளித் தரும் படைப்பாற்றல் கொண்டவர் கருணா.

அக்கணத்து நிகழ்வுகளைப் பதிவு செய்து வருங்கால மானுடத்துக்காக பவுத்திரப் படுத்த வேண்டும் என்ற அக்கறை மட்டுமல்லாது, அதில் கலை நேர்த்தியும்
முழுமையாக பொதிந்திருக்க வேண்டும் என்பதில் சிரத்தை கொள்ளும் ஒரு கலைஞன்.

எம் மத்தியில் நடக்கும் சடங்கு, சம்பிரதாய, இலக்கிய நிகழ்வுகளைப் பதிவு செய்யும்போதுகூட, நட்டமேனிக்கு மனிதர்களை நிரைகட்டி நிற்கவிட்டுப் படமாக்காமல், நடப்பவைகளை அந்தந்தப் படிக்கே பதிய வேண்டும் என்ற முறையைக் கையாள்பவர்.

மனிதர்களை, குறிப்பாகக் குழந்தைகளைப் படமாக்கும்போது மென்மையான மலரை உள்ளங்கையில் பவ்வியமாக ஏந்துவதுபோல் காட்சிப் படுத்தித் தருவது, பார்க்கப் பார்க்க வடிவாக இருக்கும். அதுவும் கறுப்பு வெள்ளையில் படம் கதைத்துக்கொண்டே இருக்கும்.

ஒரு சம்பவம்:-
தமிழ்த் திருமண நிகழ்வொன்றைப் படம் பிடிக்க கருணவை அழைத்திருந்தார்கள். மறுநாள் கருணா தனது கமெராவை தோளில் மாட்டிக்கொண்டு குறிப்பிட்ட ஒரு தெருவோரத்தில் காத்து நின்றார்.
கருணாவை அழைத்துச் செல்ல ஒருவர் காரில் வந்தார்.
'எங்கயண்ண படமெடுக்கிற சாமானுகள்?' எனக் கேட்டார்.
'இந்தா இருக்கு' என தனது தோளில் கிடந்த கமெராவைக் காட்டினார்.
'உது போதுமோண்ணை? குடையள், லைற்றுப்பெட்டி, ஸ்ராண்ட் ஒண்டும் தேவையில்லையோண்ணை?'
'அதுகள் எதுக்கு?'
'அஸிஸ்ரெண்டுகள் ஆரும் வரேல்லயோ'
'அவையெதுக்கு?'
கூட்டிச்செல்ல வந்த நபருக்கு ஒரே குழப்பம்.
இப்படியொரு கலியாணப் போட்டோகிராஃபரை அவர் சந்தித்திருக்க மாட்டார் தானே.

இக்கலைகளின்பால் தொடர்ந்து கருணா தேடிக்கொண்டே இருந்தார். கற்றுக்கொண்டே இயங்கினார். பயணியாகவே இருந்தார். தொன்மை புதைந்துகிடக்கும் இடங்களை நோக்கிப் பயணித்தார். தன்னைத் தேடி வரும் நண்பர்களை தொன்மங்கள் படிந்துள்ள இடங்களுக்கு அழைத்துச் செல்வார். தான் அள்ளிச் சேர்த்திருக்கும் அந்தந்த இடங்களின், பூர்வகுடிகளின் வரலாற்றுத் தடங்களை நண்பர்களோடு சேர்ந்து சுவைத்தார்.
'புகைப்படக்கலை எமது சமூகத்துக்குள் ஒரு கலை என்ற நிலையை இன்னமும் எட்டவில்லை' என 80களில் தொடங்கி சொல்லிக்கொண்டே வருகிறேன். இந்த ஆதங்கம் கருணாவுக்கும் உண்டு. புகைப்படக் கலை மட்டுமல்ல, ஓவியக் கலையும் அப்படியான ஒரு நிலையில்தான் உள்ளது என்பதையும் சேர்த்தே ஆதங்கம் கொள்வார்.
அப்படிச் சொல்லிவிட்டு சும்மா இருந்துவிடவில்லை.

இத்தாலியின் வெனிஸில் உள்ள கிராண்ட் கால்வாயில் அமைக்கப்பட்டிருக்கும் நான்கு பாலங்களில் ரியால்டோ பாலம் ஒன்றாகும். இது கால்வாயின் குறுக்கே உள்ள மிகப் பழமையான பாலமாகும்.


The Merchants of Venice நாடகத்தில் Shylock கூறுவதாக ஒரு வசனம் வருகிறது. அதில் இந்தப் பாலத்தின் பெயர் குறிப்பிடப்படுகிறது. அதனாலும், அழகிய அமைப்பாலும் இது மிகவும் பிரபலமானது. ஒரு காலத்தில் இந்த நாடகத்தில் Shylock ஆக கருணா நடித்திருக்கிறார். இது கருணா எடுத்த படமாகும்.

Shylock:
"In the Rialto you have rated me about my moneys and my usances. Still I have borne it with a patient shrug; For sufferance is the badge of our tribe: You call me misbeliever, cut-throat dog, and spit upon my jewish gaberdine."

2016இல் கனடாவில் கருணாவைச் சந்தித்தபோது 'இந்தச் செல்லக் கையால என்னக் கொஞ்சம் படம் எடுத்துத் தாங்கோ' எனக் கேட்டது இன்னும் ஒலித்தோயவில்லை.
ஆனால் அந்தக் கலைஞன்.....
அதிலொரு படத்தையும் இங்கே பதிவு செய்கிறேன். -தமயந்தி.



# போரைப் பேசுதல்



ஒரு போரைப் பற்றி யாரிடம் பேசுவது?
ஒரு போர் ஏற்படுத்தும் இழப்புகளையும், இழிவுகளையும் வலிகளையும், அதன் பரிமாணங்களையும் எப்படிப் பேசுவது? இன்னும் பிறக்காத நட்சத்திரத்தைப் பற்றி உங்களுக்குத் தெரியுமா? உறைந்து போயிருக்கும் ஒரு பெருநதியைப் பற்றி நீங்கள் அறிந்ததுண்டா? ஒரு நகரமே அழிவதை நின்று பாரக்கும் ஒரு பெண்ணை நீங்கள் சந்தித்ததுண்டா?


*ஒஸ்லோ நகரத்தில் அமைக்கப்பட்டுள்ள திறந்தவெளி ஓவியக்கண்காட்சி*



‘ரோஜாஅரண்மனை’ என்பது ஒரு ஓவியக் கண்காட்சி.
இரண்டாம் உலகயுத்ததின் போது நோர்வே சந்தித்த பேரழிவுகளின், ஆக்கிரமிப்பின் சாட்சியாக வடிவமைக்கப்பட்டிருக்கிறது. ஆர்ப்பாட்டமோ, ஆரவாரமோ இல்லாமல் ஒரு யுத்தத்தைப் பேச முயலும் ஒரு முயற்சியாக முன்னெடுக்கப்பட்டிருக்கிறது.

பெருமதில்களின் உயரத்தில் போரின் அழிவுகளும், சிதைவுகளும் ஓவியங்களாக வரையப்பட்டிருக்கின்றன. கண்காட்சியின் வடிவமைப்பே ஒரு வளிமண்டலத்தில் கோள்கள் சுழல்வது போன்ற நீள்வட்ட வடிவங்களில் அமைக்கப்பட்டிருக்கின்றது.

போர்க்கால ஆக்கிரமிப்புகளில் அறியப்பட்ட மற்றும் அறியப்படாத மனிதர்களின் கதைகள் இங்கே ஓவியங்கள் மற்றும் எழுத்துக்கள் மூலம் மனதை துன்பப்படுத்துகின்றன. சிந்திக்கத் தூண்டுகின்றன. போர்க்காலத்தை நினைக்க வைக்கின்றன.



மிகக் காத்திரமான சிந்தனையோடும் தெளிவான பார்வையோடும் இக்கண்காட்சி வடிவமைக்கப் பட்டிருக்கின்றது. இக் கண்காட்சிக்கு பின்னால் ஒரு குட்டிக் கதையினையும் உருவகித்திருக்கின்றார்கள்.



ஏதென்ஸ் நகரத்தின் பறவை ஷெல்

### கதை:

ஏதென்ஸ் நகரத்தின் அக்ரோபோலிஸில் பிறந்த ஒரு குட்டிப் பறவை ஷெல். வடதிசை நோக்கிப் பறந்து வந்திருக்கிறது. உலகின் பல கருத்துக்களையும், உரையாடல்களையும் செவிமடுத்து வந்ததனால், இந்த முழு உலகத்துக்குமான குடிமகனாய் தன்னை உணர்வதாகச் சொல்கிறது. தன்னை ஒரு வானியலாளர் என்றும் சொல்லிக்கொள்கிறது.

வடதுருவ வான்பரப்பை ஆய்ந்தறியக் கிளம்பிய ஷெல், ஒஸ்லோ நகரின் ‘ரோஜாஅரண்மனை’யில் இருக்கும் நட்சத்திரத்தை வழியில் கண்டு கொண்டது. அந்நட்சத்திரத்தை ஆய்ந்தறிந்து கொள்வதற்காக இங்கேயே தங்கிவிட்டது. இப் புனைவிலிருந்தே மானுட வலிகளையும் போரையும் பேசத் தொடங்குகிறார்கள் ஓவியர்களானா வேபியோன் சண்ட் (Vedmund Sand) அய்முன் சண்ட் (Eimund Sand)

### காட்சியும் வடிவமும்

வானத்தில் கோள்கள் சுழலும் வடிவத்தில் பாதை அமைத்து, அதன் நெடுகிலும் நூற்றுக்கும் மேற்பட்ட கதைகளும் ஓவியங்களும்



காட்சிப்படுத்தப்பட்டிருக்கின்றன. போகும் வழியெங்கும் பல அறைகள், அங்கெல்லாம் ஓவியங்கள். இராக்காலத்தில் பார்ப்பவர்கள் ஒளியமைப்பையும் கண்டுணரமுடியும்.

கிரேக்க தேசத்தில் இருந்து எடுத்துவந்த மனிதநேயச் சிந்தனைகளையும், சித்தாந்தங்களையும் குட்டிப் பறவையான ஷெல், பார்வையாளர்களுக்குச் சொல்லும் வண்ணம் வழிநெடுகிலும் கூடுகள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

போர் பற்றிய கதைகளுக்குப் பஞ்சம் உண்டோ? இரண்டாம் உலக யுத்தத்தின் போதிருந்து எமது இன்றைய காலம் வரை போரின் முகங்களாக வாழ்ந்தவர்களின் முகவோவியங்களுடன் ஆரம்பிக்கும் கண்காட்சி, மெல்லமெல்ல பலதரப்பட்ட மனிதர்களுடைய, அனுபவக் கதைகளுக்குள் எம்மை நகர்த்திச் செல்கிறது.


## சில கதைகள்





*1941 ஆம் ஆண்டு, சோவியத்யூனியனுடன் தாக்குதலுக்குச் சென்ற ஜேர்மனியர்களுக்கு எதிராகத் தனது பதினோராவது வயதிலேயே துப்பாக்கி ஏந்திய சிறுமி நீனா.*

ஜேர்மனிய சிப்பாயுடன் காதல் கொண்ட ஒரு தாய்க்கு பிறந்த குழந்தை லைலா. தாய் அவரைப் பார்த்துக்கொள்ள முடியாத சூழலில் ஜேர்மனியில் உள்ள அப்பப்பா வீட்டில் வளர்கிறாள் லைலா. போர் முடிந்ததும் நோர்வே அரசு அவளை நோர்வேக்கு வரவழைத்தாலும், ஜேர்மனிய சிப்பாயின் மகளென்ற வெறுப்பின் காரணமாகத் தாயின் புதிய குடும்ப உறவுகளிடம் வரவேற்பினைப் அவளால் பெறமுடியவில்லை. வேண்டப்படாதவளாக, தாயின் அன்பு கிடைக்காதவளாக, உறவினர்களால் பாலியல் தொந்தரவுக்கு ஆளாக்கபட்டவளாக, லைலாவின் வாழ்வு பேசப்படுகிறது.

இப்படியாக..




ஒரு நகரமே அழிவதை பார்த்துக்கொண்டு நிற்கும் பெண்,
நாசி நிறுவனங்களுக்கு பணியாததால் கைது செய்யப்பட்ட ஆயிரம் ஆசிரியர்கள்.ஆழ்கடலில் நிறுத்தப்பட்ட நாசிக்கப்பலுக்குத் தீவைக்கச் சிறுபடகு ஓட்டிச்செல்லும் ஒரு தனிமனிதர்.
மரண தண்டணைக்காக காத்திருக்கும் இளைஞர்கள்.



உளவு பார்ப்பதற்காக நாசிப்படை அதிகாரிகள் மத்தியில் வீற்றிருக்கும் ஒரு நடிகை, பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்காக சிலமாதங்களே ஆன தன் குழந்தையை அடுப்பறையில் தனியாக விட்டுச்செல்லும் பெண் போரின் வலிகளையும், இழப்புகளையும், சமூகம் கடந்து வந்த பாதை-களையும், அத்தோடு மனித நேயத்தையும், மானுட உன்னதங்களையும் வலியுறுத்துவற்காகவுமானது இந்தக் கண்காட்சி.

## இன்னும் பிறக்காத நட்சத்திரம்



கண்காட்சிப் பயணத்தின் சிகரமாக இருப்பது ஒரு நட்சத்திரம். முட்டைவடிவிலான ஒன்றின் மேல் அந்நட்சத்திரம் வடிவமைக்க ப்பட்டிருக்கிறது. ஒட்டுமொத்த உலக மனித நேயத்தின் குறியீடாக அது சித்தரிக்கப்படுகிறது.

உலகில் மனித நேயமும், மானிட விடுதலையும் இன்னும் பிறக்கவில்லை என்பதை சொல்வதற்காகவே 'இன்னும் பிறக்காத நட்சத்திரம்' என்று அதற்குப் பெயர் சூட்டப்பட்டிருக்கின்றது. ஒரு விதத்தில் வேதாகமத்தில் யேசுவுடன் பிறந்த 'கடவுள் பிறந்ததைக் காட்டும்' நட்சத்திரத்தினை மறுதலிக்கும் ஒரு போக்காகவும் இதனைப் பார்க்கலாம்.

அந்நட்சத்திரத்தில் இருந்து ஒரு ஆறு ஓடுவதாகவும், அது தற்போது உறைநிலையில் உள்ளதாகவும் குறிப்பிடப்படுகிறது.

இரண்டாம் உலகயுத்த ஆக்கிரமிப்பின் நினைவாக (75 ஆண்டு) வைக்கப்பட்டிருக்கும் திறந்தவெளிக் கண்காட்சி, ஒரு வருடகாலம் மட்டுமே காட்சிப்படுத்த திட்டமிடப்பட்டிருக்கிறது. சென்ற வருடம் ஆரம்பிக்கப்பட்ட இக்கண்காட்சி இந்த வருடம், வைகாசி மாதம் முடிவுக்கு வருகின்றது. பணியாளர்களிடம் பேசிய போது, சில வேளைகளில் காலம் நீடிக்கப்படலாம் என்ற எண்ணம் இருப்பதாகச் சொன்னார்கள்.

இங்கு வைக்கப்பட்டிருக்கும் ஓவியங்களை பார்வையாளர்கள் வாங்கிக்கொள்ளவும் முடியும்.

## போரைப் பேசுவது



ஒரு போரைப் பேசுவதென்பது இலகுவானதல்ல!

ஒரு போரை நினைவுகூருதல் எப்படி நிகழ்த்திக்காட்ட வேண்டும் என்பதற்கான ஒரு முன்மாதிரியாகவும் இதனை நாம் பார்க்கமுடியும்.

போரைப் பேசுதல் ஒரு கலை. சிந்தனையைச் செதுக்க முடிந்தவர்களினால், காலத்தை ஊடுருவிப் பார்க்க முடிந்தவர்களினால், குறுகிய வட்டத்துள் நிற்காது பரந்த ஒரு பரப்பிற்கு எடுத்துச்செல்ல உழைப்பவர்களினால் மட்டுமே இது முடிகிறது.

*ஓவியக்கண்காட்சியை அமைத்தவர்கள்:*
Vedmund Sand மற்றும் Eimund Sand
*இடம்:* Frognerseteren> Oslo
*காலம்:* 2020, May - 2021 May
*படங்கள்:* Kavitha Laxmi (Mobile)


http://www.roseslottet.no

# கடைசிப் பக்கம் Siste Side

måneds bilde

## பிரதிகள் தீட்டும் ஓவியன்





மரியசேவியர்ச் சுவாமியாரைப் பற்றி எழுதுவதற்கு ஏகப்பட்டது என்னிடம் இருந்தபோதும், இது படக் குறிப்புகளுக்கான கடைசிப் பக்கம் என்பதால் சிறு தகவலை மட்டும் எழுதுகிறேன்.

2001ஆம் ஆண்டு பாஸ்க்காக் காலம் நோர்வே திருமறைக் கலாமன்றம் யூலியஸ் அன்ரனியும், ஞானநாயகம் அண்ணரும் பேர்கன் நகருக்கு வரும்படி அழைத்தனர். சுவாமியாரின் பிரதியான 'பலிக்களம்'அரங்காற்று இருப்பதாகவும், ஒளியமைப்புச் செய்யும்படியும்.

அப்பப்போ நோர்வேஜிய நாடகங்களுக்கான ஒளியமைப்பு உதவியாளராகப் பணியாற்றிய மிகமிகச் சிறிதளவான அனுபவங்கள் மட்டும்தான் எனக்கு. சுவாமியாரின் தயாரிப்புக்கள் எல்லாமே மிகப் பிரம்மாண்டமானவை. பலிக்களம், காவியநாயன் போன்ற படைப்புக்களெல்லாம் மூன்று வெவ்வேறு அரங்குகளை இணைத்த பிரம்மாண்டங்கள் அவை. அரங்காற்றுக்கு முதல்நாள்த்தான் போனேன். அன்று இறுதி ஒத்திகை நடந்தது. பார்த்தேன். ஒத்திகை முடிந்ததும் நெறியாளர் யூலியஸைக் கேட்டேன் இன்னுமொரு தடவை ஒப்பனை உடைகளோடு ஒத்திகை பார்த்தால் என்ன என்று. சிரித்தபடியே, பார்க்கலாம் அண்ணே என்றார். சிறிது நேரத்தில் ஒத்திகை தொடங்கியது. எனக்குத் தேவையான ஒளியமைப்புப் பிரதியைக் குறித்தெடுத்துக் கொண்டேன். இப்போது ஓரளவு பயம் போய்விட்டது. காரணம், அந்தப் பிரதியே மிகவும் லாவகமாகச் சொல்லிவிட்டது ஒளியமைப்புக்கான பிரதியைத் தயாரிப்பதற்கான வழிவகைகளை. அப்போதுதான் முற்றுமுழுதாகப் புரிந்துகொண்டேன். சுவாமியார் தனது பிரதித் தாயாரிப்பில், அரங்காற்றுகையின் அத்தனை சட்டகங்களுக்குமான வண்ணங்களைத் தனக்குள் வரைந்துகொண்டே படைக்கிறார் என்பதை. அவர் பிரதிகளை எழுதுவதில்லை, ஓவியங்களாகத் தீட்டுகிறார் என்பதுதான் உண்மை.

அன்றைய அரங்கில் 50கலைஞர்களுக்குமேல் பங்கெடுத்துக் கொண்டார்கள். மீண்டும் 2004ஆம் ஆண்டு 'காவியநாயகன்' மேடையேற்றப் பட்டது. 75இற்கு மேல் கலைஞர்கள் பங்கெடுத்தார்கள். அப்போது ஒளியமைப்பு வேளையில் எடுத்தசில படங்கள்தான் இவை. புலம்பெயர் நாடுகளில் இப்படியொரு ஆற்றுகையை ஒப்பேற்றுவதென்பது உண்மையில் பென்னாம்பெரிய சாதனைதான்.

-தமயந்தி-



Bergen Tamilsk Avis
Ansvarlig redaktør: Julius Antonipillai - Adresse: Krohnegården 5b, 5146 Fyllingsdalen.- Telefon: 924 636 74
E-Post: ttoosai@gmail.com / antonipillai@hotmail.com
Org.nr: 926 840 320 - ISSN 2703-8440